தென்மொழி

உள்ளே...

அனைத்து
முன்னேற்றங்களுக்கும் ஒரேவழி
(பாவலரேறு பாடல்)

* * *

திருக்குறளைச் சிறுமைப்படுத்தும்
பார்ப்பனக் குறும்பு!

* * *

சாதி ஒழிப்பு
(அமைப்புகளின் கருத்துத்
தொகுப்பு)

* * *

தமிழீழம் குறித்துப்
பாவலரேறு!

* * *

நன்மையும் உண்மையும்

தில்லி மறுமொழிக்குத் தீயிடுவோம்!

தாய்மொழியிற் கற்றுயர்தல்
தக்கதெனக் கொள்ளாது
வாய்மையிலாத் தில்லி
வழங்கும் மறுமொழியை
எல்லாருங் காண
எரிப்போம் நடுத்தெருவில்
வல்லாண்மை செல்லா தினி!

தரஞ்சால் உயர்கல்வி
தண்டமிழிற் கற்கும்
உரஞ்சால்நற் கொள்கை
உமட்டலால் தில்லி
ஒருப்படா(து) உய்க்கும்
மறுமொழியை இன்னே
நெருப்புக் கிரையாக்கு வோம்!

பொறியியலைப் பூந்தமிழில்
யாங்கற்கத் தில்லிக்
குறியவர்கட் கேனோ
கசக்கிறதாம் மக்கள்
உரிமைக்(கு) உதவா
மறுமொழியை ஈண்டு
எரிவாய்க்(கு) எறிவோம் இனி!

-இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 29
ஓலை - 9 தி.பி.2028 கன்னி (செபுதம்பர்-97)
விலை உரு. 4-00

பொது உணர்வின் முதற்படி

—பாவலரேறு—

விருந்தோம்பல் என்னும் பண்பாட்டு வழக்கம் பொதுநல வுணர்வின் முதல்படி; உலக உறவுக்கு எடுத்து வைக்கப்பெறும் முதல் அடி என்க.

இல்லறம் இதன் நாற்றங்கால்; விளைவயல். மனச் செழுமைக்கும் உயிர் உறவாண்மைக்கும், உலக அறிவு விளக்கத்திற்கும் அடிப்படையாக உள்ள மாந்த நேய உறவு விருந்தோம்பலிலேயே தொடங்குகிறது.

கணவன், மனைவி, மக்கள், உற்றம், சுற்றம் என்று சுழன்றுவந்த அன்புணர்வு, இல்லத்தின் வாயிற்படி தாண்டித் தெருவில் இறங்கி வந்து, வெளியுலகப் பார்வைக்கு அடிவைக்கும் முன், மாந்தன் கொள்ள வேண்டிய முதல் பொதுவுணர்வு - அஃதாவது அறம் - விருந்தோம்பல். அவன் எதிர்கொள்ளும் முதலாவது பொதுமாந்தன் - அஃதாவது உலக மாந்தன்-விருந்தினன். விருந்தினன் வழியாகத்தான் இல்லற வாழ்வினன் புறவுலகத்தைத் தொட்டுப் பார்க்கிறான். விருந்தினனே பிறகு நண்பனாகின்றான்; துணையாகின்றான்; வழிகாட்டியாகின்றான்; ஆசிரியனாகின்றான்; அறவோனாகின்றான்; தொண்டனாகின்றான்; தலைவனாகின்றான் என்க.

விருந்தோம்பலினின்றுதான், பொதுவுணர்வு கிளர்கிறது; நண்பு வளர்கிறது; மொழி பயிலப்பெறுகிறது; கருத்து ஊற்றெடுக்கிறது; இனம் உருவாகிறது; வீடு ஊராகிறது; ஊர் நாடாகிறது. அன்பு அருளாகி, அறமாகி உலக உறவு தழைக்க ஊற்றம் பெறுகிறது.

உலக மருதத்தில், தமிழ் வயலில், முளையிட்டுத் தோன்றிச் செழித்து வளர்ந்த இப் பண்பாட்டுப் பயிரின் நறுவிளைவு நாகரிகமெனத் தலையெடுத்து நின்றது, அக்கால். அதன் பின்னர்த் தமிழகத்துப் புகுந்த ஆரியக்களையால், இப் பயிர்விளைச்சல் படிப்படியாய்க் குன்றத் தொடங்கியதைக் கண்டு மனம் நொந்த நூலாசிரியர், மாந்த நேயமும் அறமும் தழைக்க, இப் பண்பாட்டு உணர்வை மீண்டும் வலியுறுத்தும் முகத்தான், இவ்வதிகாரத்தை வரைந்து, தமிழின மேம்பாட்டிற்குப் பாயிரம் பாடினார் என்க.

'திருக்குறள் மெய்ப்பொருளுரை'.

அனைத்து முன்னேற்றங்களுக்கும் ஒரே வழி தமிழ்நிலம் தன்னுரிமை பெறுதலே!

அரசியலால் முன்னேற்றம் காண்பதற்கென் றிங்கே
அளவிறந்த கட்சிகளும் இயக்கங்களும் உண்டு.
'சரிசமநன் னிலைவேண்டும் பொருளியலில்; பின்னர்ச்
சரியாய்ப்போம் தமிழினமுன் னேற்ற'மென்றே ஓங்கி
முரசறைவர் பொதுவுடைமைக் கொள்கையினர்! மற்றும்
முழுமூடக் கொள்கைகளும் பலமதமும் சாதி
இருசுமொடிந் திடுகவென்பார் பகுத்தறிவார் என்போர்!
எந்தமிழ்முன் னேறட்டும் என்றுரைப்பார் சில்லோர்!

'இருக்கட்டும் இந்துமதம், புராணவே தங்கள்,
இதிகாச உபநிடதங்கள்; இவைதம்மா லன்றோ
உருக்கெட்டும் உளங்கெட்டும் அறிவுகெட்டும் மக்கள்
உணர்வுகெடா திருக்கின்றார் அதுபோதும்' என்றே
செருக்கெட்டும் மூளையினை அகல்வாயாய்க் கொண்டே
சிருங்கேரி காஞ்சிமட 'அதிபதிகள்' எல்லாம்
திருக்கொட்டும் உண்டியலைக் கணக்கிட்ட வாறு
திசையெல்லாம் எட்டுகின்ற புளுகுரைத்து வாழ்வார்!

வடநாட்டுத் தலைவரெல்லாம் 'இந்திமொழி கற்றால்
வளம்பெருகும் பாரதத்தில்' என்றுரைப்பார் நாளும்!
இடநோட்டம் ஆள்நோட்டம் பகலிரவு நோட்டம்
எதிர்ந்துவரும் பணநோட்டம் அனைத்தையுமே பார்த்துக்
கடனாற்றும் நந்தமிழ அமைச்சரெல்லாம் இங்கே
காவலர்கள் துணையோடு விழாவேடிக் கைகள்
உடனாற்றும் உரைவிளக்கம் விளம்பரங்கள் என்றே
ஊருக்கூர் நடந்தாலே முன்னேற்றம் என்பார்!

இந்தியினைப் பரப்புதற்குப் பலமாநா டங்கே!
இந்தியினை எதிர்த்திங்கே பற்பலமா நாடு!
முந்தியர சாட்சிசெய்த ஊழல்களை ஆய
முயற்சிபல; பொருள் கோடி; முடிவுமட்டும் முட்டை!
சந்துக்குச் சந்துகொள்ளை; சாராயம்; புளிங்கள்
சரமாரிக் கையூட்டு! தலைமறைவாய் ஊழல்!
முந்திக்குத் தாழ்வில்லை; ஆனாலும் கொஞ்சம்
மூக்குத்தான் உடைந்துவிட்ட தென்றிடுவார் ஆள்வோர்!

ஐயய்யோ, தமிழகமே! அருந்தமிழ்த் தாயே!
அளப்பரிய திட்டங்கள்; பேச்சுவிளம் பரங்கள்!
பொய்யான விளக்கங்கள் புளுகுரைகள்! ஆனால்
புழக்கடையில் சாய்க்கடையில் தெருக்கடையில் வாழும்
மெய்யான உருவங்கள் அப்படியப் படியே!
மிகையில்லை, உண்மையிது! தமிழர்களே இன்னும்
செய்யாத சமையலுக்குக் காத்திருக்க வேண்டாம்!
சிந்திப்பீர் ஒருவழியாய்த் தமிழ்நிலத்தை மீட்பீர்!

- 3.4.1979

(தாராபுரம், தமிழ்க்கலை மன்றம்—ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா மலரில் (1979) வெளிவந்தது)

இரும்பொறை

மறைவு

அருந்தமிழ் ஆர்வலரும் நீண்டகாலத் தென்மொழியன்பரும் பாட்டாளி மக்கள் கட்சியின் துணைத் தலைவருமான இரும்பொறை (குணசேகரன்) அவர்கள், கடந்த மடங்கல் 5ஆம் நாள் (21.8.97) அன்று மாரடைப்பால் இயற்கையெய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறோம்.

பொதுநல விழைவுடைய **திரு. இரும்பொறை** அவர்கள் தென்மொழியின் தொடக்கக் காலச் சில ஆண்டுகளில் பாவலரேறு ஐயா அவர்களுடன் அணுக்கமாக இருந்து தென்மொழிப் பணிகளில் ஈடுபட்டவர். தென்மொழித் தொண்டுக்காகவே தாம் பார்த்துவந்த அரசு அலுவலையுந் துறந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐம்பத்திரண்டு அகவை நிரம்பப்பெற்ற நிலையிலேயே நீடுதுயில் கொண்ட அவரது பிரிவால் வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் **தென்மொழியின்** ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இரும்பொறையின் புகழ் நீடு நிலவுக!

— **ஆசிரியர், 'தென்மொழி'**

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்முழக்கு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

தென்மொழி

மொழி—இனம்—நாடு

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.29) திபி. 202அ - கன்னி (செபுதம்பர்-97) (ஓலை.9

திருக்குறளைச் சிறுமைப்படுத்தும் பார்ப்பனக் குறும்பு!

தமிழ்நூல்களுள் அதிகமான எண்ணிக்கையில் உரைகளைக் கொண்டது திருக்குறளே. பொதுவாக எல்லார்க்கும் விளங்கும் எளிய நூல் என்று கூறப்படும் அந் நூலுக்குப் பழைய உரைகளே பல இருப்பினும் புத்துரைகளும் பற்பலவாக முளைத்துக்கொண்டே இருக்கின்றன.

முன்னை உரைகளெல்லாம் பொருத்தமற்றவை, விளக்கமற்றவை எனக் கண்டு, தாம் பொருத்தமாகவும் திருத்தமாகவும் உரை வரைந்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்னும் அக்கறை உணர்வினால் புத்துரை காணும் முயற்சியில் ஈடுபடுவோர் மிகச் சிலரே. திருக்குறளின் அமைப்பழகிலும் அதன் கருத்தமைதியிலும் ஈடுபட்டவர்களும் பெருஞ்சிறப்பு கண்டு வியப்புற்றவர்களுமான பலர், அதன்கண் தாம் ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது முன்னமே தாம் கொண்டிருக்கும் கருத்துகளுக்கு மாறான சில கருத்துகள் இருப்பது கண்டு, எப்படியாவது அதனைத் தம்முடைய கருத்துகளுக்கு ஏற்றதாகக் காட்டிவிட வேண்டும்

என்னும் பேரவா பிடர் பிடித்து உந்தப் புத்துரை கண்டு தம் முத்திரையைப் பொறிக்க முனைகின்றனர். தாம் ஏதேனும் நேரடியாகச் சொல்வதைவிடத் திருக்குறளை வைத்துக்கொண்டு அதன் மூலம் தம் கருத்துகளைச் செல்லுபடியாக்கலாம் என்ற எண்ணத்தாலும், அதற்கு மாறாகத் திருக்குறளை அறிஞருலகம் வியந்து பாராட்டுவது கண்டு, அது அப்படி யொன்றும் உலகப் பெரும்புகழுக்குரியதன்று என்று சிறுமைப்படுத்திக் காட்டும் எண்ணத்தாலும் உரையெழுதுபவர்களும் உண்டு.

புதின எழுத்தாளரும், தாளிகையாளரும், மூளையின் இயக்கம், கணிப் பொறியின் செயற்பாடு ஆகியவற்றைப் பற்றிய நூல்களின் ஆசிரியரும், சுசாதா என்னும் புனைபெயரில் அறிமுகமாகியுள்ளவருமான திரு.அரங்கராசன் என்பவர் எழுதியுள்ள திருக்குறள் புதிய உரை, இதுவரை யாரும் செய்யாத அளவுக்குத் திருக்குறளைச் சிறுமைப் படுத்தவதாக அமைந்துள்ளது.

பொதுவாகவே ஆரியப்பார்ப்பனர்கள் தமிழ்மொழியின் மீதோ, தமிழ் நூல்கள் மீதோ நல்லெண்ணம் கொள்வதில்லை. பிணந்தூக்கும் பணியாளனாயினும், குடியரசுத் தலைவனாயினும், வேதமடத் தலைவனாயினும், அறிவியற் கல்வியில் மேம்பட்டவனாயினும், தமிழ்ப் பேராசிரியராகவே இருப்பினும் சமற்கிருதம் தேவபாடை என்பதிலும், இருக்கு முதலான வேதங்களே எல்லாவற்றிலும் மேம்பட்டவை என்பதிலும் அவர்கள் இரு கருத்துகளுக்கு இடங்கொடுப்பவரல்லர். தமிழ் வாயிலாகவே அடிப்படை யறிவும், தமிழ்மக்களின் உதவியுந்துணையும் பெற்றே உலகியல் வாழ்வும் பெற்று உயர்ந்திருப்பினும் அவர்களைப் பொறுத்த அளவில் தமிழ் நாலாந்தரமானதே; தமிழர்கள் கீழ்மக்களே.

இம்முடிபுக்குச் சுசாதா நெறிவிலக்கானவரல்லர் என்பது அவரது திருக்குறள் புதிய உரையில் மெய்ப்பிக்கப்படுகின்றது. அதன் சீர்கேடுகள் அனைத்தையும் ஈண்டு விண்டு விளக்குதல் இயலாதெனினும் எடுத்துக் காட்டாகச் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

திருக்குறளைத் தாம் கற்றுத் தெளிந்ததோடு அதற்கு உரையெழுதி மற்றவர்களுக்கு விளக்கப் புகுந்த திரு. சுசாதாவின் தமிழறிவும் இலக்கியப் பயிற்சியும் எத்தகையன என்பதை அவரது முன்னுரைச் செய்தி யொன்று வெளிப்படுத்துகின்றது.

இவர் தம் நண்பர் திரு. இந்திரா பார்த்தசாரதி என்பவருடன் பேசிக் கொண்டிருக்கையில்

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

என்னுங் குறளுக்குப் 'பெண்களைச் சிறையில் வைத்துக் காவல்காத்து என்ன பயன்?' என்கிற பொருளில் ('அர்த்தத்தில்') தான் பலர் உரை

யெழுதியிருப்பதாகத் தாங் கொண்டதைக் குறிப்பிட்டாராம். 'வீட்டில் வைத்துப் பூட்டிவைப்பதையும் கொள்ளலாம்' என்று அவர் சொன்ன போது, இந்தக் காலத்து ஐய மனப்பான்மையுடைய ('சந்தேக'க்) கணவர்களுக்குப் பொருந்தும்படியாக 'வீட்டில் வைத்துப் பெண்களைப் பூட்டிவைப்பதால் என்ன செய்யமுடியும்? அவளுக்குச் சிறந்த பாதுகாப்பு அவள் நல்லொழுக்கம்தான்' என்பது சரியாக வருகிறதாம்.

"சிறைகாப்பாவது (சிறைச்சாலையில் வைத்துக் காப்பது போன்று) இரவும் பகலும் வீட்டைவிட்டு வெளியேறாமல் காவல் செய்தல்" என்றே தமிழறிஞர்கள் பொருள்கொள்வர். அகப்பொருள் இலக்கியங்களில் களவுக் காலத்தின்கண் பெற்றோர் தலைமகளை இற்செறித்தல் போன்றதே யாதலால், இது வீட்டில் கட்டுப்படுத்தி வைத்தல் என்றே இயல்பாகப் பொருள் கொள்ளமுடியும். சுசாதா, தம் நண்பர் இந்திரா பார்த்தசாரதி யைச் சந்திக்கு முன்புவரை சிறைகாக்கும் காப்பு என்றால், சிறைக் கோட்டத்தில் வைத்துக் காவல் காப்பதாகவே கருதியிருந்திருக்கின்றார். அப்படித்தான் பலர் உரையெழுதியிருப்பதாகவும் கூறுகின்றார். இவர் கருத்துப்படி தம் மனைவியர்மீது ஐயுறுங் கணவன்மார் அவர்களைக் கொண்டுபோய் நடுவண் சிறை போன்ற சிறைக்கோட்டத்தில் அல்லது காவல் நிலையத்தில் இருப்பது போன்ற சிறைச் சாலையில் அடைத்து வைக்கச் செய்வர் போலும்.

இவ்வாறு இவர் கருதியது உலகியல் நடைமுறைகளுக்குப் பொருந்துமா என்றும் இவர் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. அதுமட்டுமன்று. இப்படித்தான் பலர் பொருள் எழுதியுள்ளனர் என்றுங் கூறுகிறார். ஒரு கால் இவரை யொத்த அறிவாளிகள் வேறு யாரேனும் எழுதியிருக்கக் கூடும். தமிழறிஞர்கள் யாரும் அவ்வாறு எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. இக்கால உரையாசிரியர்களான மூதறிஞர் பாவாணர், முனைவர் வ.சுப. மாணிக்கம் முதலானவர்களெல்லாம் வீட்டுச் சிறை என்பதை வெளிப்படையாகவே எழுதியுள்ளனர்.

இனி, அகப்பொருள் பற்றிய காமத்துப் பால்— கற்பியலில், தலைமகன் பிரிந்து சென்றமையால் தனித்திருந்து வாடும் தலைமகளின் துன்ப மிகுதியைக் கூறுவதான 'தனிப்படர் மிகுதி' என்னும் அதிகாரத்தைக் 'கைக்கிளை' என்று பொருள்படுமாறு 'ஒருதலைக் காதல்' என்று எழுதி யிருப்பது சுசாதாவின் தமிழிலக்கிய அறிவுக்கு மேலும் ஒரு சான்று.

அன்றியும், விருந்தினரைப் பேணும் (உபசரிக்கும்) முறைமை பற்றிய விருந்தோம்பலை விருந்தாளிகள் என்றும், பிறனில் விழையாமை என்பதனை மற்றவன் மனைவி என்றும், புலான் மறுத்தல் என்பதனைச் சைவம்-அசைவம் என்றும், இரவச்சம் என்பதனைப் பிச்சை என்றும், இவ்வாறே இன்னம் பலவற்றையும் அவர் எழுதியிருப்பது புல்லிய

நோக்கேயன்றி, அவர் கூற்றுப்படி பெருமைமிகு (மகத்தான) இலக்கியத் திற்குரிய சரியான அணுகுமுறை யாகுமா?

தலைவலி போயிற்று என்றால் தலை போயிற்று என்பது போல உறுப்பு நலன் அழிதல் என்னும் அதிகாரத்தை "உறுப்புகள் (அங்கங்கள்) அழிந்தன" என்று இவர் எழுதியிருப்பது நகைப்பூட்டுவதுமட்டுமன்றி, இவற்றிலெல்லாம் இவர்தம் அக்கறையற்ற போக்கையும் பொருட்படுத்தாத நோக்கையும் புலப்படுத்துகின்றது.

இனி, தாங்கண்ட கருத்தை "இன்றைய எளிய வார்த்தைகளில்" தெரிவித்திருப்பதாகவும், அடுத்த நூற்றாண்டில் அடியெடுத்துவைக்கப் போகும் இக்கால இளைஞர்களுக்குத் திருக்குறளில் ஆர்வத்தையும் வியப்பையும் ஏற்படுத்தவே உரையெழுதப் புகுந்ததாகவும் கூறும் சுசாதா, முக்கால் நூற்றாண்டுக்கு முன்னரே மக்கள் வழக்கற்றுப் போன ஜன்மம், சந்தோஷம், நிஜம், ஆபரணம், விஷயம், சகஜம், பிரயோஜனம், ஜடம், வேசி, ராஜ்யம், வியாதி, உபகாரம், இஷ்டம் முதலான நூற்றுக்கணக்கான சொற்களைத் திருக்குறள் உரையில் கையாண்டிருப்பது அவரது கூற்றுப் பொருளற்றது என்பதையே காட்டுகிறது.

இனி, சாதி என்னுஞ் சொல் தொல்காப்பியத்தில் 'நீர்வாழ் சாதி' என்றாங்குப் பிரிவு என்ற அளவிலேயே பயன்படுத்தப்பட்டிருப்பினும், இன்று மக்களிடையே ஆரிய முறைப்படியான பிறப்பின் அடிப்படை கொண்ட சாதியையே குறித்து மக்களிடையே ஏற்றத் தாழ்வுகட்கும், வேற்றுமை யுணர்ச்சிகட்கும், தீண்டாமைக் கொடுமைக்கும், வன்முறை வெறியாட்டங்களுக்கும் அடிப்படையாக நிலவுவது வெளிப்படை. "இன்றைய எளிய வார்த்தைகளில்" உரையெழுதப் புகுந்தவர்

> கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
> புன்மை தெரிவார் அகத்து

என்னுங் குறட்பாவுக்குக் "கீழ்ச்சாதி என்று சொல்லப் போனால், அது கொலை செய்கிற சாதிதான்" என்று எழுதியுள்ளார். [கொலைவினையர் ஆகிய மாக்கள் கொலைவேள்வி செய்யும் சடங்காசிரியரையும் (புரோகிதர்) புலைவினையாவது அச்சடங்காசிரியன்மார் செய்யும் கொலை வேள்வியையுங் குறித்தலைச் சுசாதா அறிந்திருக்க வாய்ப்பில்லை.] அவர் சாதி என்னுஞ் சொல்லை என்ன நோக்கத்தோடு ஈண்டு வலிந்திழுத்துக் கையாள்கிறார் என்பதை அன்பர்கள் உன்னிப்பார்க்க!

திரு. சுசாதா தமது புதிய உரையின் மூலம், ஒருபக்கம் மதிப்பது போலவும் வியப்பது போலவும் எழுதினாலும், மறுபக்கம் அதற்கு மாறான கருத்துகளைப் பாய்ச்சத் தவறவில்லை.

நட்பியலில் பெரியாரைப் பிழையாமையை அடுத்த அதிகாரம் பெண் வழிச் சேறல். இதன் தொடர்ச்சியாக வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது ஆகிய அதிகாரங்கள் அமைந்துள்ளன. இவ் விடத்தில் திருக்குறளின் அமைப்புமுறை பற்றி ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. திருக்குறளின் சிறப்புக்கு அதன் கருத்துவளமும் யாப்புநலமும் போல் அதன் கட்டமைப்பும் பெருங்கரணியமாதலால், நீண்ட காலப் பயன் பாட்டால் நேர்ந்த சிறு பிறழ்ச்சியைத் தலைக்கீடாகக் கொண்டு, சுசாதா தமது முன்னுரையில் கூறுமாறுபோல் திருக்குறளின் அதிகாரம் முதலிய அனைத்துக் கட்டமைப்புகளுமே திருவள்ளுவரால் செய்யப்பட்டன அல்லவென ஒருதலையாகக் கூறமுடியாது. பெண்வழிச் சேறல் என்னும் அதிகாரம் அது வைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பொறுத்துக் காமவின்பக் கழிபேராசையால் பெண்ணுக்கு அடிமையாதல் கூடாது என்று எச்சரிக்கும் போக்கில் பொருளமைதி கொண்டுள்ளது. ஆகவே, இதனை வறிதே பெண்களைச் சேராதே என்று சுசாதா எழுதுவதன் மூலம் திருக்குறளுக்கு எத்தகைய மதிப்பைச் சேர்க்கிறார் என்பது நோக்கத் தக்கது.

சுசாதா நோக்கமின்றி இயல்பாக இவ்வாறு எழுதிவிட்டதாகக் கொள்ள இயலவில்லை. அன்புடையவராக இருத்தல், அடக்க முடையவராக இருத்தல் என்று பொருள்படும் அன்புடைமை, அடக்க முடைமை என்னும் அதிகாரப் பெயர்கள் அன்பு, அடக்கம் எனச் சுருக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறே இன்னும் பல. இல்வாழ்க்கை என்னும் சொல் ஐந்து குறட்பாக்களில் இடம்பெற்றிருந்தும் இல்வாழ்க்கை அதிகாரப் பெயரை இல்லற வாழ்க்கை என்று நீட்டுகிறார். 'இகல்' என்னும் அதிகாரப் பெயர் கற்றவர்கட்கும் அருஞ் சொல்லாயிருந்தும் அதனை இகல் என்றே குறிப்பிடுகிறார். ஆனால் பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரப் பெயர்களில் பெரியார் என்னுஞ் சொல் இகல் என்பது போலன்றி எளிதில் விளங்குவதேயாயினும் பெரியாரைத் துணைக் கோடலை "பெரிய மனிதர்களின் துணையை நாடுதல்" என்றும் பெரியாரைப் பிழையாமையைப் "பெரியவர்களை இகழாதே" என்றும் எழுதுகிறார். இவற்றையும் இன்ன பிறவற்றையும் கூர்ந்து நோக்கினால், இகல்போல் விளங்காவிடினும் கேடில்லை; ஆனால் வேறு வகையாகப் பொருள்பட்டுவிடக்கூடாது என்பதிலும், இலைமறை காய்போல் தம்மவர்க்குச் சார்பாக இருப்பினும் தாழ்வில்லை என்பதிலும் விழிப்பாக இருக்கிறார் என்பது புலப்படும்.

ஏறத்தாழ கடந்த மூவாண்டுக்கு முன் திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக்க வேண்டும் என்னும் கருத்து தாளிகைகளில் இடம்

பெற்றது. பேராயக் கட்சித் தலைவர் கருப்பையனாரே(மூப்பனார்)கூட ஒரு கூட்டத்தில் இக் கருத்தைப் பேசினார். அப்போது எழுத்தாளியான இராசம் கிருட்டிணன் என்னும் அம்மையார் திருக்குறளில் பெண்ணடிமைக் கருத்துகளிருப்பதாகவும், ஆகவே, அதனை அது தேசிய நூலாக்குதற்கு முழுமையான தகுதியுடையதன்று என்றும் பொருள்படக் கிழமை இதழொன்றில் கட்டுரை வரைந்திருந்தார். ஆரியப் பார்ப்பனியம் தமிழுக்கு மாறான ஒவ்வொரு நடவடிக்கையிலும் எத்துணை விழிப்பாகச் செயல்படுகிறது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

மேற்கூறிய அம்மையாரும் மற்றுஞ் சிலரும் திருக்குறளில் பெண்ணடிமைக் கருத்துகளிருப்பதாகக் கூறுவதையும், இப் பெண்வழிச் சேறலைச் சுட்டிக் காட்டுவதையும் சுசாதா அறியாமலிருக்கமுடியாது. ஆகவே, பெண்வழிச் சேறலை வறிதே 'பெண்களிடம் சேராதே' என்று எழுதுவது எப்படி?

அடுத்த நூற்றாண்டில் அடிவைக்கப்போகும் இக்கால இளைஞர்கள் எவர்க்கும், சுசாதா குறிப்பிடுவது போல் திருக்குறள் பற்றிய ஆர்வத்தையோ வியப்பையோ இவ்வுரையின் மூலம் ஏற்படுத்த முடியாது என்பது மட்டுமன்று; திருக்குறளுக்கு இவர்தம் புதிய உரையை மட்டுமே படிப்பவர் எவரும் 'அட இவ்வளவுதானா' என்ற புல்லிய மதிப்பீட்டையும் புறக்கணிப்பான எண்ணத்தையுமே கொள்வர் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

நூல் நெடுகலும் ஏராளமான எழுத்துப் பிழைகளும், சொற் பிழைகளும், சொற்றொடர்-தொடரியப் பிழைகளும் மலிந்து கிடக்கின்றன. தமிழில் எவ்வகையான அடிப்படைத் தகுதியும் அற்ற, ஒரு பாகிஜைக் கூடப் பிழையின்றி எழுதத் தெரியாத இவர், தமிழின் கொடுமுடியாகவும், பலப்பல உரைகளைக் கொண்டதாகவும் விளங்கும் ஓர் அருநூலுக்கு உரை எழுதப்புகுந்தது எத்துணைப் பேதைமை! 'முயற்சி திருவினை யாக்கும்' எனத் திருவள்ளுவர் தந்த ஊக்கத்தால் இச் செயலில் இறங்கியதாக இவர் கூறுவது திருவள்ளுவரையே அவமானப் படுத்துவதாகும்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்

என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பது இவருக்கு விளங்கவில்லை போலும்!

பரமார்த்த குரு மாணவர்க்கே ஏற்கும் இப்புதிய உரையின் உள் நுழைந்து, இதன் புரைபாடுகளையும் குறைபாடுகளையும் எடுத்து விளக்கப் புகுந்தால் இவ்வேடு இடங்கொடாது. 'தெய்வங்கள் அடிவைக்கவும் அஞ்சுமிடத்தில் பேய்கள் நுழைய விரைகின்றன' என்னுங் கூற்றுக்கு இவ்வுரை முயற்சியே சிரிய எடுத்துக்காட்டு! —இறை

சாதி ஒழிப்பு

குறித்துப்

பலரின் கருத்துகள்...

சாதி ஒழிப்பு:

மார்க்சு என்னும் மாதிரியைத்தான் விடுதலையின் தனிப்பெரும் மாதிரி யாகப் பார்க்க விழைகிறோம். இதற்கு முன்னால், இயேசுவென அறிமுகப் படுத்தப்பட்ட மாதிரி, மெல்லப் பெரியார் என்னும் மாதிரியாகத் திரிய வேண்டும். பின்னர், பெரியாரென்னும் அம்மாதிரி, மார்க்சு என்னும் மாதிரியாக உருமாற வேண்டும். இதுவே தமிழகச் சூழலில் மார்க்சிய அறிவு விளக்கத்தைக் கொண்டு சாதி ஒழிப்புக்கு விடைகாண உதவும். மார்க்சிய மெய்யியலும் புரட்சிக் கொள்கையும் தமிழக மரபுடன் இவ்வாறுதான் ஒன்ற இயலும். மார்க்சியம் இவ்வாறு தமிழ்மயப் படுத்தப்படுவது நல்லது. இது தமிழகத்தின் தேசிய விடுதலைக்கு நல்ல வழிகாட்டும்.

தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சாதி ஒழிப்புக்கும் எப்படி முடிச்சுப் போடுகிறீர்கள் என நம்மிடையேயுள்ள சிலர் கேட்பது காதில் ஒலிக்கத் தான் செய்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களைச் சாதியால் ஒடுக்கி வருகிற 'சூத்திர'ருடனும் பிற மேல் சாதியினருடனும் சேரத்தான் முடியுமா வென்பதே அவர்களுடைய ஐயம். "தாழ்த்தப்பட்டோருக்கு நாடு இல்லை" என்றெல்லாம் சொல்லிக் குழப்பி வருகிற சில அரைகுறைகளையும் நாம் பார்க்கிறோம். இவர்கள் சாதியத்தை வெறும் உணர்ச்சியின் அடிப்படையில் மட்டுமே பார்க்கின்றனர். அறிவு அடிப்படையில் அதை விளங்கிக் கொள்வதில்லை. சாதியோ பிரிக்கின்ற ஆற்றல். தேசிய இன ஒற்றுமையோ இணைத்து வைக்கவல்ல ஆற்றல். சாதிகளின் அடிப்படையில் இயக்கங்களைக் கட்டப்பார்த்தவர்களும் தோற்றுள்ளனர். இந்த நிலையில், இருவேறு வாழ்வியல்களுக்கும் காலங்களுக்கும் உரிய சாதி, வகுப்பு என்னும் திணைகளை ஒழிக்கவல்ல பெரு முயற்சியின் தொடக்கப் பாடமாகத் தமிழ்த் தேசியம் உள்ளது.

இந்தி(யா) ஒரு மூன்றாம் உலக அரசு. இத்தகைய மூன்றாம் உலக நாடுகள் யாவும் பொதுவாகப் பன்னாட்டின அரசுகளாகத்தாம் இருக்கின்றனவேயல்லாமல் ஒருதேச அரசுகளாக (Nation - States)

இல்லை. இந்த மூன்றாம் உலக அரசுகள் பல, தத்தம் ஆட்சிக்கும் சுரண்டலுக்கும் ஆட்பட்டு அடிமையுண்ட தேசங்களையும் தேசியஇனங்களையும் அடக்கியொடுக்கி ஆண்டு வருகின்றன. இந்தி(யா)வில் மூன்றாம் உலக வந்தேறியத்திற்கு (Third World Colonial-ism) ஆட்பட்டுள்ள தமிழகம், காசுமீரம், நாகாலாந்து, பஞ்சாபு போன்ற தேசங்களும் தேசிய இனங்களும் நான்காம் உலகத்தைச் சேர்ந்தனவாக இருக்கின்றன.

இந்த நிலையில், இந்த நான்காம் உலக நாடுகளில் காணப்படுகிற சாதி, வகுப்பு போன்ற அக முரண்பாட்டுத் திணைகளை முதன்மைப் படுத்தி நான்காம் உலக நாடுகளில் வளர்ந்து வருகிற தேசிய விடுதலைப் போராட்டங்களைச் சிலர் கெடுக்கப் பார்க்கின்றனர். மூன்றாம் உலக வந்தேறியமும் அதன் வழியாக இயங்கி வருகிற முதலிரு உலகங்களைச் சேர்ந்த வல்லரசுகளும் உறுதிப்படவும் நீடிக்கவும்தான் இஃது உள்ளபடியே உதவும். இதனால், நான்காம் உலக நாடாகிய தமிழகத்தில் விளங்குகிற சாதி வகுப்பு முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக ஒடுக்குண்ட சாதி வகுப்பு நலன்களை உருவகப்படுத்துகிற ஒரு தலைமையின் கீழ்த் தமிழகத்தின் தேசிய விடுதலைப் போரை ஆற்றுப் படுத்துவதுதான் சரியான வழியாக இருக்கும். இதுதான் ஒன்றின் வழியாக மற்றொன்றைத் தீர்த்து வைத்தல் என்னும் இயங்கியல். புரட்சி வழியில் இது சாதி ஒழிப்புக்கு வழிகோலும். வகுப்பு ஓர்மையை வளர்க்கும்.

— அறிஞர் குணா.

(வகுப்பும் சாதியும் வருணமும்)

வளர்ந்துவரும் குமுகாயத்தில் பிற்படுத்தப்பட்டோர் யார்? தாழ்த்தப்பட்டோர் யார்?

அரசுகள் சாதி, இனவேற்றுமைகள் வளராமல் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். மக்கட்குலத்தில் வேற்றுமைகளை வளர்க்கும் இயக்கங்களை அரசுகள் மறைமுகமாகவோ, நேரிடையாகவோ ஊக்குவிக்கக் கூடாது. சாதி வேற்றுமைகளைத் தூண்டும் இயக்கங்களின்மீது நடவடிக்கை எடுத்து ஒடுக்கவேண்டும். சாதிகளற்ற குமுகாயத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது குமுகாயத்தில் முன்னைய வரலாற்று நிகழ்வுகளின் காரணமாகத் தாழ்த்தப்பட்டிருக்கின்ற - பிற்படுத்தப்பட்டிருக்கின்ற குமுகாயத்தினரின் முன்னேற்றத்திற்குத் தடை ஏற்பட்டுவிடக் கூடாது. குமுகாய நடைமுறைகளால் நலிந்து பின்னடைந்திருப்பவர்கள் வலிமை யுடையவர்களுடன் சமநிலையில் போட்டிபோடும் தகுதியினை இழந்திருப்பர். ஆதலால், நலிந்தவர்கள் வளர்ந்தவர்களோடு வளர்ந்து

வந்து சமநிலையில் நிற்கும் வரை தகுதி, திறமை என்று பேசுவது ஏமாற்று வேலையேயாகும். வளராதவர்கள் வளர வழி தேவை.

ஆதலால், தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய குமுகாய அமைப்புகளுக்கு உரிய ஒதுக்கீடுகள் ஞாயமானவை. இந்த ஒதுக்கீடுகளுக்குச் சாதி அடிப்படையில் இலக்கணம் வகுக்காமல் தகுதி நிலையில் இலக்கணம் கண்டு நடைமுறைப் படுத்துதல் நல்லது.

அதாவது,

1. குமுகாய அமைப்பில் தீண்டத்தகாதவர்களாக வாழ்பவர்கள் — குமுகத்தின் ஏற்பிசைவு பெறாது ஒதுங்கி வாழ்பவர்கள்.
2. கல்வியில் பின் தங்கியவர்கள்
3. பொருளியலில் பின்தங்கியவர்கள்.

—என்ற இம்மூவகையிலும் பின்தங்கியவர்கள் தாழ்த்தப் பட்டவர்களாகக் கருதப்பெறல் வேண்டும்.

ஆண்டு ஒன்றுக்கு (உரு.15,000) உருவா பதினையாயிரமும் அதற்கு மேலும் வருவாய் வருகிறவர்கள் பொருளியலில் பின் தங்கியவர்களாக மாட்டார்கள். அதுபோலவே நிலவுடைமையில் 10 வரையறைக் குறுக்கம் உடைமையாக உடையவர்களும் பொருளியலில் பின் தங்கியவர்கள் அல்லர்.

மேற்கண்ட மூன்றில் (2) (3) இரண்டிலும் பின் தங்கியிருப்போர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்; குமுகாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தும் மற்ற இரண்டு தகுதிகளில் ஒன்றை அவர்கள் பெற்றிருந்தால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்றே கருதப் பெறுவர். (2) (3) இரண்டில் ஏதேனும் ஒன்றில் பின் தங்கியிருப்போர் பிற்படுத்தப்பட்டோர்.

இந்த அடிப்படையிலேயே முன்னேற்றத்திற்குரிய பொருள் உதவிகள் படிப்பிற்குரிய இட ஒதுக்கீடுகள், வேலை வாய்ப்புக்குரிய இட ஒதுக்கீடுகள், அனைத்தும் செய்து அவரவர் மேம்பாட்டுக்குரிய உதவிகளைச் செய்து ஒத்த நிலைக்கு உயர்த்திக் கொண்டுவருமாறு அரசுகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் சாதிகளின் பெயரால் வணிக நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரசுச் சார்புடைய நிறுவனங்கள் தோன்றாமலிருக்க வழிவகை காணுமாறு மக்கள் மன்றத்தையும் அரசுகளையும்கேட்டுக்கொள்வதுடன்சாதிப்பெயரால்அமையும் நிறுவனங்களுக்கு அரசுகள் உரிமம் வழங்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

குமுகாயத்தின் பிரிவுகள் மூன்று

1. தாழ்த்தப்பட்டவர்கள் - குமுகாயத்தில் ஏற்பிசைவு பெறாது ஒதுக்கப் பட்டவர்கள் - ஒதுங்கி வாழ்பவர்கள்.
2. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்
3. பிற்படுத்தப்பட்டவர்கள்.

இம்மூவகைப் பிரிவினரும் சலுகைகள் பெறுவதற்குரிய பிரிவினர். இப்பிரிவுகளின் வரிசைப்படியே முன்னுரிமைகள் வழங்கப் பெறுதல் வேண்டும். இம் மூன்றிலும் அடங்காதவர்கள் வளர்ந்த குமுகாயத்தினர் என்று கருதப்பெறுவது ஞாயத்தின் பாற்பட்ட உண்மையே.

1. தாழ்த்தப்பட்டவர்கள்:

குமுகத்தில் தீண்டாமையால் ஒதுக்கப்பட்டிப்பவர்கள் (இப்போதும் தீண்டாமைக் கேடு நடைமுறையில் இருந்தால்)

2. கல்வியில் பின்தங்கியவர்கள்:

ஒரு குடும்பத்தில் மூன்று தலைமுறைகள் தொடர்ச்சியாக (மூவர்) பட்டப் படிப்புப் பெற்றவர்கள் இருந்தால் அல்லது மூவர் பட்டப் படிப்புப் பெறும்வரை.

3. பொருளியல் தகுதி:

வரையறைக் குறுக்கம் 10க்குமேல் நிலம் சொந்தமாக உடையவர் -கள், அல்லது குடும்ப வருமானம் (கணவன் - மனைவி இருவர் வருமானம்) உரு. 15,000க்கு மேல் உள்ளவர்கள்.

1. இம்மூன்று நிலைகளிலும் மூன்றிலும் பின் தங்கியிருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள்.
2. கல்வியிலும் பொருளியலிலும் பின்தங்கியிருப்பவர்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்.
3. கல்வியில் அல்லது பொருளியலில் பின்தங்கியிருப்பவர்கள் - பிற் படுத்தப்பட்டவர்கள்.

இந்தப் பிரிவுகளில் மூன்றிலும் பின்தங்கியவர்களுக்குக் கல்வியில் இட ஒதுக்கீடு, மதிப்பெண்களில் சலுகை, உதவித்தொகை ஆகிய அனைத்தும் வழங்கப்பெறுதல் வேண்டும். மதிப்பெண்களில் சலுகை வழங்காமல் இவர்கள் தகுதியைப் பெறத் தக்கவாறு சிறப்புடைய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் ஏற்புடையதே.

அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இப்போது உள்ள 18 விழுக்காடு போதாது. மேலும் இடங்களைக் கூட்டி 30 விழுக்காடு

ஆக்கலாம். பிற்பட்டோருக்கு 50 விழுக்காடு, மிகவும் கூடுதல். 45 விழுக்காடு ஆக்கலாம். பொதுவாகத் தகுதி - திறமையின் வழி வருகிறவர்களுக்கு 25 விழுக்காடு இடம் ஒதுக்கலாம்.

—தவத்திரு குன்றக்குடியடிகளார்.
(11—10—80 இரத்தினகிரித் திருக்குறள்
பேரவை மாநாட்டுத் தீர்மான விளக்கம்)
—**"கடவுளைப்போற்று! மனிதனை நினை!"**—நூலில்

சாதிகளை ஒழிப்பது எப்படி?

(அ) வறட்டு வழக்கும் சீர்திருத்த வழக்கும்:

இரண்டுமே புரட்சிக்கு எதிரானவை, இரண்டுமே ஆளும் வகுப்புகளை அரசியல் அதிகாரத்தில் நீடிக்கச் செய்வன, தீண்டாமை - அண்டாமை, காணாமை, பேசாமை அனைத்துமே சாதியமைப்பிலிருந்தே எழுகின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் தொடக்கூடிய விலங்குகள்கூட அல்ல என்ற நிலையிலிருந்தே எழுகின்றன. மற்ற நாடுகளில் அடிமைகளை இரண்டு கால் விலங்கு (அ) பேசக்கூடிய விலங்கு என்றே கருதினர். தொடக்கூடாத விலங்கு எனக் கருதவில்லை. அந்நிலையில் தொடக்கூடிய விலங்கா இல்லையா என்பதே முதல் கேள்வி. அதன் பின்னரே? விலங்கா? எனும் கேள்வியும் அதற்கடுத்தே மற்ற மக்களுக்குள்ள சமமான உரிமை, குடிநாயக உரிமை உண்டா? இல்லையா? என்னும் கேள்வியும் எழுகிறது. அனைத்தையும் மறுத்து வைத்திருப்பதே இன்றைய சாதியமைப்பு.

ஆனால் வறட்டு வழக்காளிகளைப் பொறுத்தவரையில் சாதிச் சிக்கல் என்பது எல்லாச் சிக்கல்களையும் போலவே, தேசிய இனச் சிக்கல்களைப் போலவே, அது ஓர் எளிய சிக்கல். தேசிய இனச் சிக்கலை எடுத்தால் எப்படி இந்திய ஒருமைப்பாடு கெட்டுவிடுமோ அதேபோல் சாதிச் சிக்கலை எடுத்தால் இங்குள்ள ஒருமைப்பாடு கெட்டுவிடும் என்கின்றனர். இயல்பான சிக்கலிலும் அது வெறும் பண்பாடு பற்றிய சிக்கலே என்கின்றனர். அதாவது புரட்சி முடிந்தபிறகு, ஆளுமைக்கு வந்தபிறகு பல ஆண்டுகள் கழித்து பண்பாட்டுப் புரட்சி நடத்துகின்ற காலத்தில் கவனிக்கப்பட வேண்டிய சிக்கல் என்கின்றனர். அதுவரையில் தேசிய இனபிரச்சினையில் எப்படிச் சிக்கலில் செத்துமடிய வேண்டுமோ அதுபோலச் செத்துமடிய வேண்டுமென்கின்றனர். அதுவரை அவர்களைக் காவுக்(பலி)கொடாக்களாக பயன்படுத்தி கொள்ளலாமெனப் பார்க்கின்றனர். ஆனால் குமுகத்தில் ஒவ்வொரு தனி மாந்தனும் பகுதியாக இருந்தால்தான் குமுக நல ஊதியங்களில் அவனுக்குப் பற்றும்

கவலையும் உண்டாகும் என முனைவர் அம்பேற்கார் அறிவுறுத்தியுள்ளார். அது முற்றிலும் உண்மை. எனவே வறட்டு வழக்காளிகளுடைய நிலைப் பாடென்பது மார்க்கிய இலெனினிய மாவோயிய சிந்தனை இங்குள்ள நிலைமைகளில் செயல்பட்டு விடாதபடிக்கு வறட்டுப் பாடமாக்கி வைக்க வேண்டுமென்பதே. சாதியமைப்பை எதிர்த்து— சாதிவெறிக் கொடுமைகளை எதிர்த்து நிற்கக் கூடாதென்பதே.

அடுத்து ஒவ்வொரு சாதி மோதலும் நிலவுடைமையாளர்களுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டின் விளைவா அல்லது மக்களுக்கிடையே உள்ள முரண்பாட்டின் விளைவா என்னும் கேள்வி எழுகிறது. உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்திப் பிளவுபடுத்தி மோத வைத்து மோத வைத்து ஆளவேண்டித் தனியுரிமைகளைத் தனித்தனியாகக் கொடுத்துத் தனித்தனிச் சாதிகளாக ஆக்கி ஒவ்வொரு தனியுரிமையும் சாதிக்கு மட்டுமே உரியதாக வைத்திருக்கிறது நிலக்கிழமை. எந்த ஒரு தனி உரிமையும் எந்த ஒரு தனிச் சாதிக்கும் மட்டுமே ஆனதாக இருக்க கூடாதென அனைத்துச் சாதியினருக்கும் பொதுவுரிமை ஆக்கப்பட வேண்டுமென மக்கள் மோதுகிறார்கள். நிலக்கிழமை வழங்கி உள்ள தனி ஒரு சாதியின் தனி ஓர் உரிமையை மக்கள் ஏற்றுக்கொள்ள அணியமாக இல்லை. எனவே உயர்ந்த சாதி என்ற பெயரில் தனியுரிமை தனக்கு மட்டுமே உரியதாக நிலக்கிழமையின் சாதியமைப்பை நிலை நிறுத்தும் ஆற்றலுக்கும், அதை உடைத்தெறிந்து பொது உரிமை ஆக்க வேண்டுமெனக் கிளம்பும் மக்களுக்கும் இடையில் நடக்கும் மோதல்களே ஒவ்வொரு சாதி மோதலும். எந்த ஒரு தனியுரிமையும் எந்த ஒரு சாதிக்கும் மட்டுமே அல்லாமல் அனைவருக்கும் பொதுவுரிமை ஆக வேண்டுமென்பது முறையான மக்களாட்சிக் கோரிக்கை. எனவே அதனை ஏற்று பொது உரிமைக்காக நாம் நிற்க வேண்டுமே அல்லாமல் நிலக் கிழமை ஒரு சாதிக்கு மட்டுமே உரியதாக வழங்கி உள்ளதை நிலைநிறுத்த அன்று. எனவே சாதி மோதலை மக்களுக்கிடையிலான மோதலாக முரண்பாடாகப் பார்க்க முடியாது.

— "சாதி ஒழிப்பின் தேவையும், தமிழக விடுதலையும்" நூலில். (தோழர் தமிழரசன்)

ஆளுமைச் சாதி ஒழிப்பும், இந்தியத் துணை வல்லரசு எதிர்ப்பும்

தமிழ்த் தேசத்து மக்களுக்கு அனைத்து அரசியல், பொருளியல், பண்பாடு குமுகாய உரிமைகளைச் சமமாக்கிப் பொதுவாக்குவதே தமிழகத் தேசியக் குடியாட்சி அரசியலின் உள்ளடக்கமாகும். தமிழகத் தேசியக் குடியாட்சி அரசியலுக்குச் சாதி ஒழிப்பின் தேவை மிகவும்

முகாமையானதாகும். ஏனெனில் மக்களை ஒன்றுபடுத்தாமல் தேசத்தை உருப்படுத்தவோ அரசியல், பொருளியல், பண்பாடு, குமுகாய உரிமைகளைக் கோரவோ முடியாது. சாதிகளின் பெயரால் ஆழமான வேறுபாடுகளின் அடிப்படையில் தமிழக மக்கள் பிரிந்து கிடப்பதே சாதி ஒழிப்பின் தேவையைக் கட்டாயமாக்குகிறது. சாதிகளுக்குள் வல்லாண்மை செலுத்தி வரும் சாதிகளை ஒழித்த பின்பே, அவற்றுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை விடுவித்துச் சாதியற்ற குமுகாயத்தை உருவாக்க இயலும். இந்நிலையில் தமிழகத் தேசியக் குடியாட்சி அரசியல் என்பது இந்தியத் துணை வல்லரசு எதிர்ப்பு - வல்லாண்மைச் சாதி ஒழிப்பு அரசியலே ஆகும்.

தமிழகத்தில் சாதி ஒழிப்புப் போராட்டம் வெறும் பெயர்க் குறியீடுகளை மட்டும் ஒழிப்பதற்கான போராட்டம் அன்று. மாறாகச் சாதிகளின் நிலைப்புத் தன்மையை அழித்தொழிக்கும் போராட்டமாகும். ஏனெனில் சாதியானது வெறும் பெயர்க் குறியீட்டில் மட்டும் தங்கியிருக்கவில்லை. மாறாக, பொருளியலையும், அரசியல் ஆளுமையையும் சார்ந்தே அவை நின்று நிலைத்து வருகின்றன. இதனால், சாதியொழிப்புப் போராட்டம் என்பது பெயர்க் குறியீட்டு ஒழிப்பை மட்டுமல்லாது பொருளியல் அரசியல் ஆளுமை ஒழிப்பையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வகையில் ஆளுமைச் சாதி ஒழிப்புப் போராட்டமானது ஆளுமைச் சாதிகள் கற்பித்துள்ள நடைமுறை வேறுபாடுகளை மட்டும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டதன்று. மாறாக, ஆளுமைச் சாதிகளின் பொருளியல் அடித்தளத்தையும், அவற்றின் அடிப்படை கொண்ட அரசியல் ஆளுமையையும் தகர்த்தெறிவதை நோக்கமாகக் கொண்டதாகும். இவ்வாறே ஆளுமைச் சாதி ஒழிப்பு அரசியல் திட்டம் தமிழகத் தேசியக் குடிநாயக அரசியலின் நடுவத்திட்டம் ஆகிறது. இவ் அரசியலில் ஒடுக்கப்பட்ட சாதிகளின் குறியீடுகள் புரட்சிக் குறியீடுகளாக உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டும். அவை மக்கள் அளவினவாக்கப்பட வேண்டும். குடிநாயக வழியில் ஏற்கப்படுபவையாக மாற்றப்பட வேண்டும். ஆளுமைச் சாதிகளின் குறியீடுகள் எதிர்ப் புரட்சிக் குறியீடுகளாகக் கற்பிக்கப்பட வேண்டும். அவை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும்; புரட்சியால் அழித்தொழிக்கப்பட வேண்டியவையாக மாற்றப்பட வேண்டும். இவ்வாறே ஆளுமைச் சாதி ஒழிப்பு அரசியல் நிறைவேற்றப்படும்.

— **தமிழ்நாடு பொதுவுடைமைக்கட்சி.**

(—அமைப்புக்குழு)

தேசிய விடுதலைப் புரட்சியும் சாதி ஒழிப்பும்

மார்க்சிய-இலெனியர்கள் புதிய குடிநாயக ஒப்புரவிய விளைவாக்க முறையை - குமுகாயத்தை நோக்கம், திட்டம் கொள்கையாகக் கொண்டு செயல்படுவதால் அவர்கள் தமது கட்சியைப் பாட்டாளி வகுப்புக் கட்சி என்றும், தாம் நடத்தும் புரட்சியைப் பாட்டாளி வகுப்புத் தலைமையிலான புரட்சி என்றும் உறுதிபடக் கூறுகிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டும் மெய்யியல் கோட்பாடாக மார்க்சிய-லெனினியம் இருப்பதால் அதைப் பாட்டாளி வகுப்புக் கோட்பாடு என்கிறார்கள்.

இப்போது சாதி ஒழிப்புச் சிக்கலைக் கவனிப்போம். தேசிய விடுதலைப் புரட்சியின் மூலம் புதிய குடிநாயக - ஒப்புரவியக் குமுகாயத்தைக் கட்டமைக்கும் புரட்சி பாட்டாளி வகுப்புத் தலைமையிலான புரட்சி. இத்துடன் சேர்ந்து சாதி ஒழிப்புக் கடமை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது?

சாதியை ஒழிக்க வேண்டுமானால் இரண்டு பணிகள் நிறைவேற்றப் பட வேண்டும். முதலாவது, சாதிய உறவுகளால் பயன்பெறும் சாதிய வல்லாண்மை ஆற்றல்கள் தனிமைப்படுத்தப்பட்டுச் சாதி வேறுபாடற்ற முறையில் உழைக்கும் மக்கள் ஓரணியில் திரட்டப்பட வேண்டும். இது அரசியல் பணி. இரண்டாவது, சாதியம் நிலவுவதற்கான பொருளியல் அடித்தளம் ஒழிக்கப்பட வேண்டும். இது பொருளியல் அரங்கிலான பணி.

பின்தங்கிய நிலவுடைமை மற்றும் முதலாளியத்துக்கு முந்திய உருவாக்க உறவுகளே சாதியம் தொடர்ந்து நீடித்திருப்பதற்கான பொருளியல் அடிப்படைகளாக இருக்கின்றன. தொழில்துறை ஆக்கம் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்து மிகப் பெரும்பான்மையான மக்கள் அவ்வாக்கத்தில் ஈடுபடுகின்றவர்களாக மாறும்போதுதான் சாதிய உறவுகள் படிப்படியாகத் தளர்ந்து இறுதியில் ஒழியும். ஆனால் இன்று தொழில்துறை வளர்ச்சி என்பது தரகு முதலாளிய வளர்ச்சியாகவே இருப்பதால் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் தொழில்துறை உறவுக்குள் ஈர்க்கப்படாமலேயே விட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெருமளவு மக்கள் முன்னேறிய தொழில்துறை உருவாக்கத்தில் ஈர்க்கப்பட வேண்டுமானால் தரகு முதலாளிய---அரைநிலவுடைமை விளைவாக்கமுறை முற்றாக ஒழிக்கப்பட்டு தேசியத் தொழிலாக்கம் கட்டற்ற முறையில் வளர்க்கப்பட வேண்டும். இதை ஒரு தேசிய விடுதலைப் புரட்சி நிறைவேற்றும். அ்தாவது சாதியம் நிலவுவதற்கான பொருளியல் அடித்தளத்தை நொறுக்கி எறியும் பணியைத் தேசிய விடுதலைப் புரட்சி நிறைவேற்றும்.

சாதி வல்லாண்மை ஆற்றல்களைத் தனிமைப்படுத்த உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டும் பணி எவ்வாறு நிறைவேறும்?

உழைக்கும் மக்கள் சாதிய ஒடுக்கு முறைக்கு மட்டும் அல்லாமல் சாதி வேறுபாடற்ற முறையில் தேசிய ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி இருக்கிறார்கள். எனவே ஒரு சரியான தேசியத் திட்டத்தின் அடிப்படையில் தேசிய விடுதலை மற்றும் தேசியக் கோரிக்கைகளை முதன்மைப்படுத்தி நடத்தப்படும் போராட்டங்களை உழைக்கும் மக்கள் நடுவில் கட்டமைப்பதன் மூலம் அவர்களைச் சாதிவேறுபாடற்ற முறையில் ஒரு குடைக்கீழ் அணிதிரட்ட முடியும். இது சாதி வல்லாண்மை ஆற்றல்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும். அ்தாவது சாதி வல்லாண்மை ஆற்றல்களைத் தனிமைப்படுத்தி உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கு வலுவான தேசிய இயக்கம் கட்டப்படுவது கட்டாயமாகும்.

இவ்வாறு ஒரு வலுவான தேசிய இயக்கத்தின் மூலம் சாதி வல்லாண்மை ஆற்றல்களைத் தனிமைப்படுத்துவது; தேசிய விடுதலைப் புரட்சியின் மூலம் சாதியத்தின் பொருளியல் அடித்தளத்தைத் தகர்த்தெறிவது; இவைதாம் சாதியத்தை ஒழிப்பதற்கான வழியும் தேசிய விடுதலைப் புரட்சிக்குப் பாட்டாளிவகுப்பு தலைமையளிப்பது பற்றிய கோட்பாடும் ஆகும்.

- புரட்சிக்கனல் (அக்தோபர் 1993)
தமிழ்நாடு மார்க்சிய - இலெனினியக் கட்சி.

சாதி வல்லாண்மையும் தீண்டாமையும் அகல அரசும் மக்களும் செயல்படுத்த வேண்டிய வேலைத் திட்டங்கள்

1. கட்டாய இலவயக் கல்வி பதினான்கு அகவை வரை உறுதியாக அனைவர்க்கும் வழங்க வேண்டும்.

2. சாதி மறுப்புத் திருமணம் செய்துகொள்வோரில் இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருந்தால் ஒருவருக்கு அரசு கட்டாயம் வேலை அளிக்க வேண்டும்.

மற்ற சாதியினரிடையே சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்வோருக்கும் பரிசளிப்பு, கடனுதவி போன்ற ஊக்கங்களை அரசு செய்ய வேண்டும்.

3. சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டோருக்கும் அவர்தம் குழந்தைகளுக்கும் கல்வி, வேலை வாய்ப்பில் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இவர்களின் எண்ணிக்கையை ஐந்தாண்டிற்கு ஒரு முறை கணக்கெடுத்து அதற்கேற்ப இட ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டும்.

4. காதல் திருமணங்களில் காவல் துறை கெடுபிடிகளை நீக்கும் வகையில் இது தொடர்பான (அகவைக் குறைவு, பெண் கடத்தல், நகை திருட்டு முதலியவை) முறையீடுகளைப் பெற்றுக்கொள்வது உட்பட அனைத்து உசாவல் நடவடிக்கைகளுக்கும் தனி வழக்கு மன்றம் அமைக்க வேண்டும். இச் சிக்கலில் காவல்துறை இவ்வழக்கு மன்ற ஆணையின் கீழ் மட்டுமே இயங்க வேண்டும்.

5. கல்லூரி விடுதிகளில் இடம்கோரும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயம் இடம் அளிக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஒரே இலவய விடுதி வேண்டும். ஒவ்வொரு அறையிலும் இம் மாணவர்கள் கலந்து இருக்கும் படி செய்ய வேண்டும்.

6. தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு நோக்கிலான பாடங்களைப் பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் சேர்க்க வேண்டும்.

7. சிற்றூர்க் கோயில்கள், பொதுச் சொத்துகள் ஆகியவற்றில் தாழ்த்தப் பட்டோருக்கு உரிய பங்கு வழங்கப்பட வேண்டும்.

8. கோயில்களில் எந்தச் சாதியாரும் வழிபாடு செய்கிற உரிமை வேண்டும். (இது பற்றி உச்சத் தீர்வு மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்).

9. அரசு வீடு கட்டும் திட்டத்திலும், அரசு உதவி பெறும் தனியார் வீடு கட்டும் திட்டத்திலும் தாழ்த்தப்பட்டோர்க்கு 35% வீடுகள் ஒதுக்க வேண்டும்.

10. தாழ்த்தப்பட்டோர்க்கும் பிற்படுத்தப்பட்ட ஏழைகளுக்கும் அரசு கட்டித் தரும் வீடுகள் ஒரே பகுதியில் இருக்க வேண்டும்.

11. அரசு அறிவிப்புகளைப் பறையடித்து (டாம்டாம்) அறிவிக்கக் கூடாது. துண்டறிக்கை, ஒலிபெருக்கி அறிவிப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

12. சுடுகாட்டுக் காவற்பணிகள், செத்த கால்நடை அப்புறப்படுத்தல் போன்ற பணிகளுக்கு ஊராட்சிக்கு இரு நல்வாழ்வுத்துறைத் தொழிலாளிகளை மாதச் சம்பள அடிப்படையில் அமர்த்த வேண்டும். எந்தச் சாதியாரும் இப்பணிக்கு வரலாம்.

13. பொதுச் சுடுகாடு - இடுகாடு நமது நோக்கம். எனினும் தாழ்த்தப் பட்டோர்க்கு வாய்ப்பான இடத்தில் சுடுகாடு - இடுகாடு இல்லை என்றோ அவற்றுக்குப் பொதுப்பாதை இல்லை என்றோ உள்ள சிக்கல்கள் நீடிக்கக் கூடாது. போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு இச்சிக்கலை இரண்டாண்டுகளுக்குள் தீர்த்து விட வேண்டும்.

14. மின்சாரச்சுடுகாடுகள் அனைத்து ஊர்களிலும் வேண்டும். முதல் கட்டமாக அனைத்து நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலாவது இவற்றை

உடனே அமைக்க வேண்டும்.

15. 'பஞ்சம' நிலங்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

16. குத்தகை, வாரம் என்ற வகையில் உள்ள நிலக்கிழமையை ஒழித்து அந் நிலங்களை அவற்றைப் பயிர்ச்செலவு செய்வோர்க்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் வழங்க வேண்டும். நிலமற்ற ஏழைகளுள் தாழத்தப் பட்டோர்க்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

17. மாவட்டங்களுக்குத் தனியார் பெயர் சூட்டக்கூடாது. அதனதன் தலைநகர்ப் பெயராலேயே அவை அழைக்கப்பட வேண்டும். போக்கு வரத்துக் கழகங்களுக்கும் தனியார் பெயர் சூட்டக்கூடாது. இந்தப் பெயர் சூட்டல்கள் பெரிதும் சாதி அடிப்படையில் நிகழ்வதால் இம்மாற்றம் தேவைப்படுகிறது.

18. ஒத்த தன்மையுள்ள சாதிகளை ஒரு தொகுப்பாக்கி அதனடிப் படையில் தொகுப்பு முறை இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இட ஒதுக்கீட்டில் சிற்றூர், முதல் தலைமுறை என்பவை கணக்கில் கொள்ளப் பட வேண்டும். தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களுக்கு அட்டவணைச் சாதியினர் என்கிற நிலையில் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

சாதி வழி மக்கள் தொகைக் கணக்கெடுக்க வேண்டும்.

19. முழு மதுவிலக்குக் கொணர்ந்து முறையாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

20. சாதி மோதல்கள் பற்றி ஆய்வு செய்து, அவற்றைத் தடுப்பதற்கு உரிய பரிந்துரைகள் வழங்க உயர்வழக்கு மன்ற நடுவர்களைக் கொண்ட உசாவல் ஆணையம் அமைக்க வேண்டும்.

—தமிழ்த் தேசியப் புரட்சியில் தீண்டாமை ஒழிப்பு -
('தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி' - வெளியீடு)

அரசை வீழ்த்தாமல் நாம் பார்ப்பனியத்தையும், சாதியையும் வீழ்த்த முடியாது

பார்ப்பனியம் என்பதைப் பார்ப்பன, இந்து மதப் பண்பாட்டு மயமாக்கம், சமற்கிருத மயமாக்கம், இந்திய மயமாக்கம் எனும் மூன்று நிலைப்பாடுகளில் நடுவப்பட்டதாகவே பார்க்கலாம்.

சாதியத்தை எஞ்சிய நிலவுடைமையோடு அரசு கொண்டுள்ள உறவின் தொடர்பில் பார்க்கலாம்.

எனவே இங்குப் பார்ப்பனியம் என்பதும், சாதியம் என்பதும் தன்மை அடிப்படையில் இருவேறு கூறுகளே.

ஆனால் - அவை அரசிடம் நடுவங்கொண்டு அரசால் வளர்க்கப் படுகின்றன. பார்ப்பனியத்தையும், சாதியத்தையும் கட்டித் தழுவுகின்ற வகையிலேயே இன்றைய இந்தியப் பாராளுமன்ற அரசுகள் இயங்கிக் கொண்டுள்ளன.

எனவே, - அவை சார்ந்த கருத்துகளை மட்டுமே தொலைக்காட்சி, வானொலி போன்ற மக்கள் தொடர்புக் கருவிகளின் வழி பரப்புதல் செய்கின்றன.

இந்நிலையில் இவை இரண்டும் தன்மை அடிப்படையில் வேறுபட்டனவாக இருப்பினும் - ஆளுமை அரசிடம் நடுவங்கொண்ட நிலையில் இவை இரண்டும் அரசைத் தாங்கிப் பிடிக்கிற வகையில் ஒரே நோக்கம் கொண்டவையாக அமைகின்றன.

எனவே தேவைக்கேற்ப ஒன்றை ஒன்று உயர்த்திப் பிடிக்கத் தொடங்கு கின்றன. ஒன்றை ஒன்று சார்ந்து வளர்கின்றன.

சாதியம் - வருண அடிப்படையின் மாதிரியாக்கப்பட்டதின் வழி அது பார்ப்பனியத்தின் துணையைப் பெரிதும் நாடுகின்றது. பார்ப்பனப் பண்பியல்களை எதிர்க்கிறப் போக்கில் சிலவகையில் பார்ப்பனியத்தை மறுத்தாலும், சாதியத்தைத் தக்க வைக்கிற நோக்கில் பார்ப்பனியத்தோடு உறவே கொள்கிறது.

எனவே இவை இரண்டையும் இரு முகங்களை உடைய ஒரே பொருளாகவே கணக்கிட முடியும். ஒரு காசின் இரண்டு பக்கங்களைப் போன்றதே. எனவே ஒன்று எதிர்க்கப்படுகிற போது - மற்றொன்று அரசின் ஆதரவோடு அந்த எதிர்ப்பை உடைக்கிறது.

சாதியத்தின்வழித் தீண்டாமையை நிலைநிறுத்துகிற கோயில் கருவறை யில் நுழைந்து வழிபாடு செய்வது தீண்டாமைவழி மறுக்கப்படுகிறது. அண்மையில் 'சிறீரங்கம்' கோயிலின் கருவறைக்குள் ம.க.இ.க.வினர் நுழைந்தனர் என்பதற்காக அவர்களில் பலரை அடித்துத் தாக்கியதோடு, அவர்களையெல்லாம் கொலைவழக்கில் போட்டதோடு, கோயிலின் தூய்மை கெட்டுவிட்டதாக **'லகு சம்ரோக்சனம்'** (தீட்டுக்கழிப்பு வேள்வி) என்கிற வேள்வி செய்து கோயிலைத் தூய்மைப்படுத்தி இருக்கின்றனர்.

இதைப் பார்க்கையில் - **கருவறை நுழைவை மறுப்பது சாதியமாகவும்- அதை மீறி நடத்தியதைத் தாக்கிச் சிறையிட்டது அரசாகவும் - தொடர்ந்து கோயிலைத் தூய்மைப்படுத்தி 'லகுசம்ரோக்சனம்' நடத்தியதைப் பார்ப்பனியமாகவும்** - நாம் பகுத்துக் காணலாம்.

ஆக - இவை தம்நிலையில் எந்த அளவில் ஒற்றுமை கொண்டவை என்பது தெளிவாய் விளங்கும்.

இறுதியாக - இரண்டின் ஒழிப்பும் எவற்றை எதிர்மைப்படுத்துவதில் நிறைவேறும் - என்று நாம் பார்க்க வேண்டியுள்ளது.

பார்ப்பனியமும், சாதியமும் ஒரே காசின் இரண்டு பக்கங்களில் இருப்பதையும் - அதைக் கட்டி அணைப்பதும், வளர்ப்பதும் அரசாக இருப்பதையும் நாம் கண்டோம்.

இங்கு அரசே அவற்றை வாழ்விப்பதாக உள்ளதும், அந்த ஆளுமை வாழ்க்கைக்கு ஏதேனும் ஊறு நேருமானால் அதைத் தன் கைக்கூலிக ளான காவல்துறையை, படைத்துறையைக் கொண்டு ஒடுக்குவதுமாகவே உள்ளது.

சிற்றூர்களில் ஏற்படுகிற சாதிச்சிக்கல்கள் பெரும்பாலும் மேல்சாதிய நிலவுடைமையர்களை எதிர்க்கு ஒடுக்கப்பட்ட கூலி உழவர்களின் போராட்டமாகவே உள்ளது.

மேல்சாதியினர்களின் கருத்துப்படி 'அவர்களின் பண்பி'யல் தாக்கத்திலிருந்தான காரணிகளிலிருந்துதான் அ்தாவது இழித்துப் பேசுவது, மதிக்காதது, ஊர்ப்பொதுக் கிணற்றைப் பயன்படுத்துவது, ஊர்ப் பொது நிலத்தைப் பயன்படுத்துவது போன்ற காரணிகளாலேயே சாதி மோதல்கள் வருகின்றன எனக் குறிப்பிட்டாலும் - இந்தப் பண்பியல் தாக்கங்களே - நிலவுடைமையாளர்கள் தங்களின் ஆளுமைச் சாதிப் போக்கை நிலை நிறுத்திக் கொள்கிற முயற்சியில் வருவதே என்பதைப் புரியமுடியும்.

ஆக - அச்சூழல்களில் எல்லாம் அ்தாவது அச்சாதிய உரிமை மோதல்களில் எல்லாம் நிலவுடைமையாளர்களையும், ஆளுமைச் சாதி யினரையும் கூலிக் காவல்துறையே கட்டிக் காக்கிறது என்பதை நன்கு காணலாம்.

அதேபோலப் பார்ப்பனியத்தைக் கட்டிக்காக்கிற பார்ப்பனர்களுக்கு ஏதேனும் தொல்லை வருகின்றது என்றால் அடுத்த நொடியே காவல் துறை அவர்களுக்கு முழுத்துணையாக நின்று அவர்களைப் பாதுகாக்கிறது. ஆக, பார்ப்பனியத்தையும், சாதியத்தையும் கட்டிக் காக்கிற அதன் கோட்பாட்டையே நடுவமாகக் கொண்ட அரசை வீழ்த்தாமல் நாம் பார்ப்பனியத்தையும், சாதியத்தையும் வீழ்த்திட முடியாது.

—'விடுதலைக்குரல்'!
(தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்)
இதழ்எண்:1.

நன்மையும் உண்மையும்

நன்மை' என்னுஞ் சொல், பல்வேறு வடிவங்களில், உதவி, ஒழுங்கு, ஆக்கம், பயன், செம்மை, சிறப்பு, நிறைவு என்பனவும் பிறவுமான பற்பல பொருள்களில் வழங்கப்பெற்றுவருகின்றது. நல்ல பசி, நல்ல வெயில் எனவும்; நல்ல காய்ச்சல், நல்ல அடி எனவும் கூறுமிடத்து முறையே மிகுதி, கடுமை என்னும் பொருள்களில் நன்மை விளங்குமாறு போல அஃது உண்மை அல்லது இயல்நிலையைக் குறிக்கும் வகையில் வழக்குப் பெற்றுள்ளது பற்றிச் சற்று விரிவாக ஈண்டுக் காண்போம்.

நற்றாய்: மகவை ஈன்றவளே தாய். ஆனாலும், மகவை வளர்க்க அரண்மனைகளில் சிறப்பாகச் செவிலித்தாயர் இருப்பர். இன்றும் மேனிலைச் செல்வர்களின் வளமனைகளில் வளர்ப்புத் தாயரைக் காணலாம்.

பாராட்டுந்தாய் அல்லது ஈன்ற தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் என்றும்; அரசன் தேவி, குருவின் தேவி, அண்ணன் தேவி, தன் தாய், மனைவியின் அல்லது கணவனின் தாய் என்றும் ஐவகைத் தாயரை இருவகையாகக் கூறுகின்றன நிகண்டு நூல்கள்.

ஆகவே, தாய் என்னும் பெயர், பெற்றவளை மட்டுமன்றி மற்றவர்கள் சிலரையும், சிறப்பாகச் செவிலியையும் குறிக்கும்நிலை ஏற்பட்டமையால், பெற்ற தாய் நற்றாய் எனப்பட்டாள். நற்றாய்க்கண் நன்மை, உண்மை என்னும் பொருளிலேயே இடம் பெற்றிருப்பதைக் காண்க!

நல்லெண்ணெய்: எள்ளிலிருந்து எடுக்கப்படும் நெய்யே எண்ணெய். (எள்+நெய்). ஆனால், நெய் என்னும் பொதுப்பெயர் ஆன் (பசு) நெய்யையும் அதன் போலிகளையும் மட்டுமே குறிக்கும் சிறப்புப் பெயராக மருவிவிட்டமையால், அந் நெய்யின் இடத்தை நிறைக்க எண்ணெய் என்னுஞ் சிறப்புப் பெயர் பொதுப் பெயராக மருவ நேர்ந்தது. நேரவே, கடலைநெய், தேங்காய் நெய், ஆமணக்குநெய், வேப்பநெய், இலுப்பைநெய், கடுகுநெய், அடப்ப நெய் என்பவற்றிலெல்லாம் நெய் நீங்கி எண்ணெய் இடம்பெற்றது; கடலை நெய் கடலையெண்ணெயாகவும், தேங்காய்நெய் தேங்காயெண்ணெயாக வும் இவ்வாறே பிறவும் திரிந்துவிட்டன; விளக்குக்குரிய நெய்யும் விளக் கெண்ணெயாகிவிட்டது. அயல்நாட்டினின்றும் வந்த மண்ணெயும் மண்ணெண்ணெய் என்று பிழையாகப் பெயர்பெற்றது.

மண்ணிலிருந்து எடுக்கப்படும் நெய்யை மண்ணெய் என்பது போலக் கல்லினின்றும் எடுக்கப்படும் நெய் (Petro - கல்(பாறை) Petro oil - Petrol)

இறைக்குருவனார்

கல்நெய் - கன்னெய் எனப்படும். இன்று இலைதழைகளினால் பெறும் நெய்யையும் கன்னெய் (Petrol) என்று கூறி முட்டுப்படுகின்றனர் சிலர். முறி என்பது இலையைக் குறிக்கும் சொல்லாதலின் அதனை 'முறிநெய்' எனலாம். இது நிற்க!

மேற்காட்டியவாறு எண்ணெய் திரிந்துவிட்டமையால் உண்மையாக எள்ளினின்றும் எடுக்கப்பட்ட நெய்யைக் குறிக்க நன்மை கைகொடுக்கிறது. அது நல்லெண்ணெய் என்று வழங்கப்படுகின்றது.

நல்ல பாம்பு: பாம்பு என்பது நாகத்துக்கே யுரிய சிறப்புப் பெயர். பரவுதல்-விரிதல் எனப்பொருள்படும். பம்பு (பம்புதல்) என்னுஞ் சொல் தலை நீண்டு, படம் விரிக்கும் அரவின் பெயராயிற்று. ஆயினும் அப்பெயர் இனம் பற்றி விரியன், சாரை, வழலை, மண்ணுளி, இருதலைமணியன் முதலான எல்லாவற்றுக்கும் பொதுப் பெயராயிற்று. ஆனமையால், படம் விரிப்பதாகிய உண்மையான பாம்பு நல்ல பாம்பு எனப்பட்டது. இதனை மேற்காட்டிய நற்றாய், நல்லெண்ணெய் என்பனவும் உறுதிப்படுத்தும்.

ஆனால் சிலர், கெட்ட பாம்பாதலின் அதனை நல்ல பாம்பு என்பது சுடுகாட்டை நன்காடு என்பது போன்ற மங்கல வழக்கு என்றும்; மற்றுஞ் சிலர், அது தெய்வத்தன்மை பொருந்தியது என்றும், வாய்மொழி (சத்திய வாக்குக்குக் கட்டுப்பட்டது என்றும் அதனாலேயே நல்லபாம்பு எனப் பட்டது என்றும் கூறுவர். அவ்வாறு கூறுவது பொருந்தாமை மேற்கண்ட வற்றான் மட்டுமன்றிப் பிற்காண்பவற்றானும் தெளியப்படும்.

நல்ல விளக்கு: இருளகற்றும் ஒளிச்சுடரே விளக்கு. சுடரைத் தாங்கி நிற்கும் விளக்குகள் அகல்விளக்கு, கைவிளக்கு, குத்துவிளக்கு, சரவிளக்கு எனப் பல வகைப் படும். மண்ணாலும் மாழைகளாலும் செய்யப்படும் விளக்குகள் போலாது படையலின் பொருட்டு மாவால் செய்யப்படும் விளக்கு மாவிளக்கு.

இவ்விளக்குகளுக்கு ஆன்நெய் சிறுபான்மையும், ஆமணக்கு நெய் பெரும்பான்மையும் பயன்படுத்தப்பட்டன. இலுப்பை நெய்யும் அவ்விடத்தைப் பெற்றது எனினும், விளக்குநெய் என்று சிறப்புப்பெயர் பெற்றது ஆமணக்கு நெய்யே. பின்னாளில் அயல்நாட்டுத் தொடர்பால் மண்ணெய் விளக்கும், காந்தவிளக்கு, மின்கலவிளக்கு, மின்விளக்கு ஆகியவையும் வந்துற்றன. அண்மையில் வந்துள்ளது ஆவிவிளக்கு.

தமிழ்மக்கள் விளக்கை இருளகற்றியாக மட்டுமன்றி வழிபாட்டுக்குரிய தெய்வத்தன்மை பொருந்தியதாகவும் கொண்டனர். வழிபாட்டுக்குரிய மங்கல விளக்கு, திருவிளக்கு எனப்பட்டது.

பிற்காலத்தில் விளக்குக்கு மண்ணெய் பயன்படுத்தப்பட்டு, வெளிச்சம் மிகுந்த அவ் விளக்குகள் பல்வேறு வடிவில் பெருவாரியாகப் புழக்கத்திற்கு வந்தமையால் விளக்கு என்றாலே மண்ணெய் விளக்கையே குறிக்கும் நிலை ஏற்பட்டது. ஆனால், மண்ணெய் விளக்கை மங்கல விளக்காகக் கொண்டு வழிபட மனம் ஒப்பாமையால், முன்னை விளக்குகளான நெய்விளக்குகளே வழிபாட்டுக்குரியவாகத் தொடரப்பட்டன. ஆகவே, வீடுகளில் வழிபாட்டுக்குரிய நெய்விளக்கான மங்கல விளக்கே உண்மை விளக்காகக் கொள்ளப்பட்டு நல்லவிளக்கு எனச் சிறப்பிக்கப்பெற்றுத் தொடர்ந்து வருகின்றது.

நல்லமுத்து (நன்முத்து): முத்து என்பது அம்மைக் கொப்புளம், ஆமணக்கு விதை, மாதுளை யரிசி, ஆட்டக்காய், கண்ணீர்த்துளி, பனிநீர்த்துளி எனப் பலவற்றையுங் குறிக்குமேனும் முத்து என்று சிறப்பித்துரைக்கப்படுவது தொண்மணிகளுள் ஒன்றான முத்துமணியே. இப்பியினின்றும் எடுக்கப்படும் முத்தே யன்றியும் மூங்கிலினின்றும் பிறக்கும் வேய்முத்தும், யானை மருப்பிற் பிறக்கும் வேழ முத்தும், நெல் மணியிற் றோன்றும் சாலி முத்தும் பிறவுமாக முத்து பலவகைப்படும். இன்னும், கரும்பு, வாழை, தாமரை, மீன், நந்து, முதலை, உடும்பு, கொக்கு, பன்றி, ஆவு முதலான பல்வேறு உயிரிகளினின்றும் முத்துப் பிறக்கும் என்றும் கூறப்படுகிறது.

முத்துகளில் கிளிஞ்சில் முத்தே முதன்மையானது; ஆதலால், அவ் வுண்மை நிலை நோக்கி அது நல்லமுத்து - நன்முத்து எனப்பட்டது.

நல்லவெல்லம்: கரும்பின் ஆக்கங்களுள் ஒன்றே வெல்லம். உருண்டை வெல்லம், அச்சு வெல்லம் எதுவாயினும் கருப்பஞ்சாற்றின் கட்டியே. ஆனால், பனைப் பொருள்களுள் ஒன்றான கருப்பட்டியும் பனைவெல்லம் எனப்பட்டது மட்டுமன்றிப் பனைவளம் மிகுந்த வட்டாரங்களில் வெல்லம் என்பதே பனைவெல்லத்தைக் குறித்தலால், கரும்பு வெல்லம் அதன் உண்மை நிலை பற்றி நல்லவெல்லம் எனப்படுகிறது.

நல்ல சோறு: நெல்லரிசியில் ஆக்கப்பெற்றதே சோறு. எனினும் கம்பு, சோளம், வரகு, சாமை முதலான புன்செய்த் தவசங்களால் சமைக்கப்பட்டனவும், அவை மிகுதியாக விளையும் பகுதிகளில் சோறு எனப்பட்டமையால் உண்மையான சோறாகிய நெல்லரிசிச் சோற்றை நல்ல சோறு என்று வழங்குகின்றனர்.

ஆகவே, நல், நல்ல, நலம், நன்று, நன்றி முதலான பல்வேறு வடிவங் களில் பற்பல பொருள் குறித்து வரும் நன்மை, உண்மையைக் குறிக்கும் அடையாகவும் வழங்கப்பெற்று வருதல் அறியப்படும்.

❑

தமிழீழம் குறித்துப் பாவலரேறு...

நெஞ்சம் பதறுகிறது!

தமிழினம் இன்று இலங்கையில் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறது. உலக மக்களெல்லாம் பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டேயிருக்க தமிழினம் அடியோடு அழிக்கப்படுகிறது. சிங்கள வெறியர்கள் தமிழின விடிவுக்காகக் குரல் கொடுத்த தலைவர்களையெல்லாம் பூண்டோடு அழித்துக் கொண்டிருக்கிறார்கள். நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது! தமிழின வரலாற்றில் அரத்தக்கறை படிந்த இருண்ட காலங்கள் பலவுண்டு. ஆனால் அவை எழுத்திலே படித்தவை. எண்ணத்திலே செரித்தவை. ஆனால் இன்று, நம் கண்களின் முன்னால் இலங்கைத் தமிழினம் ஒட்டு மொத்தமாகக் கட்டழிக்கப்படுகிறது. ஆலமரமெனப் பரந்து வாழ்கின்ற அதன் ஆணிவேர்கள் வெட்டப்படுகின்றன. கையற்ற நிலையில் இன்று தமிழன் கண்ணீரும் கம்பலையுமாக கால்போன பக்கம் ஓடுகிறான்! கதறக் கதற உயிரோடு கொளுத்தப்படுகின்றான்! களப்பிரர் ஆட்சிக் காலத்தில்கூட, தமிழினத்திற்கு இவ்வளவு அழிவு நேர்ந்த தில்லை. இலங்கையில் எழுச்சி பெற்ற தமிழர்களை, தமிழர் தலைவர் களை, தலையரிகிறார்களே சிங்களக் கயவர்கள்! காட்டு விலங்காண்டிகள்!

உலகத் தமிழினத்தின் தாய் மண் என்று கருதப்படும் இத்தமிழகம் நெஞ்சம் பதறித் துடிக்கின்றதே! இந்திய அரசுக்கு மீளா அடிமைப் பட்டுக் கிடக்கும் நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே! அறிவியல் வளர்ச்சி பெற்ற கருவிகளை வைத்துக் கொண்டு, சிங்கள வேடர்கள் விலங்குகளைச் சுடுவது போல் தமிழினத்தை வேட்டையாடிச் சுட்டுக் கொல்கிறார்களே! ஐயகோ! தமிழன் வீரம், அறம், போர்முழக்கம் எல்லாம் செயலிழந்து கிடக்கின்றனவே! வெறும் ஏடுகளில் எழுதப் பெற்ற வரிகளாகிப் போய் விட்டனவே!

(14.8.1983)

எழுந்துள்ள தமிழின எழுச்சிக் குரல் தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்!

சூழ்நிலைகளால் நெருக்கி அழுத்தப்படாதவரை உரிமை உணர்வு எழாது. உரிமை உணர்வு எழாவிட்டால் கோரிக்கை பிறக்காது. கோரிக்கை இல்லாவிட்டால் தேவையானது கிடைக்காது. கோரிக்கை இரண்டு வகையானது. ஒன்று கருத்தளவாய் வேண்டுதல்; இரண்டு செயல் அளவாய் எழுச்சி பெற்றுப் போராடுதல். தொடர்ந்து

போராடுதல் என்பது தொடர்ந்து அடக்கப் பெறுகையில் புரட்சியாக வெடிக்கும். அவ்வாறு வெடித்ததே இப்பொழுது உலகக் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கைத் தமிழீழப் போராட்டம்.

உலகெங்கும் பரவி வாழும் தமிழ்ப் பேரினம் கடந்த காலங்களில் இழந்த படிப்படியான பேரிழப்புகளுள், அது தனக்கென இருந்த நாட்டை இழந்தது தலையாய பேரிழப்பாகும். ஒரு காலத்தில் 'ஒரு மொழி வைத்து உலகாண்ட' இவ்வினத்திற்கு இவ்வுலகில் எந்த ஒரு நாடும் இப்பொழுது சொந்த நாடாக இல்லாமல், அவ்வின மக்கள் போய் வாழ்கின்ற எல்லா நாடுகளிலும் ஓர் அடிமை இனமாகவே வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, காலத்தால் ஏற்பட்ட ஒரு கொடுமையாகும். அந்நிலையினின்று மீளும் காலம் இப்பொழுது வந்துகொண்டிருக்கிறது. இதுவும் ஒரு காலத்தின் கட்டாயமே ஆகும்.

தமிழீழப் போராட்டத்தால் தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட, ஏற்பட்டு வரும், ஏற்படப் போகும் அழிவுகள் மிகவும் கொடுமையானவையே! உலகில் வேறு எந்த இனத்திற்கும் இத்தகைய கொடுமைகள் நேர்ந்த தில்லை. வரலாற்றில் அழிந்தனவாகக் காணப்படும் பேரினங்கள் சில தன்னழிவாக ஏற்படுத்திக் கொண்ட நிலைகளையே பெரிதும் பார்க்கிறோம். ஆனால் தமிழின அழிவு பெரும் புறநிலைத் தாக்கங்க ளாலேயே ஏற்பட்டதை வரலாறு காட்டுகிறது. அதற்குப் பெருங் காரணமாக உள்ளது, தமிழினத்தில் எந்தக் காலகட்டத்திலும் இழந்த ஒற்றுமையை மீட்டுக் கொள்ளாத ஒரு நிலையே ஆகும்.

கெட்டதற்கோ நல்லதற்கோ தெரியவில்லை, தமிழீழப் படுகொலை களால், உலகில் தமிழினம் எழுச்சி பெற்றுள்ளது. இன அழிவுகள் இன எழுச்சிகளை மீண்டும் உருவாக்கிக் கொடுக்கும் என்பது வரலாறு. அந்த வரலாறு திசைதிரும்பியிருக்கிறது. எழுந்துள்ள இந்த உணர்வு இளைஞர் களிடம் பரவி நிலைத்து நிற்க வேண்டும். அப்படி ஒரு வியப்பு நிகழுமானால் அடுத்த நூற்றாண்டுத் தொடக்கத்திற்குள்ளாக, தமிழினம், தான் இழந்து போன ஆட்சியுரிமையை இவ்வுலகில் எங்கேனும் ஒரு நிலப்பகுதியுள் அமைத்துக் கொள்வது கட்டாயம் உறுதியாகிவிடும்.

(14.8.1983)

தமிழீழ விடுதலைக்கு மாற்றுத் தீர்வு தமிழீழ விடுதலையே!

முடிவாகவும், முழுமையாகவும், தமிழீழ விடுதலைக் கோரிக்கை, என்றோ உறுதி செய்யப்பட்டு விட்ட ஒன்று. முல்லை மாறிகளாலும், சொல்மாறிகளாலும், கோட்பாட்டைத் திசை திருப்புவோர்களாலும், அவர்களின் தந்நல அங்காப்புக்கு நீர் வார்த்துக் கொள்ளும் நினைவுடன், அத் தமிழீழக் கோரிக்கை நெகிழ்ச்சி கொண்டுவிடக் கூடாது. தமிழீழக்

கோரிக்கைக்கு மாற்றுக் கோரிக்கை அல்லது மாற்றுத் தீர்வு ஒன்று இருக்குமானால், அது தமிழீழக் கோரிக்கையே! வேறு எதுவாகவும் இருக்க முடியவே முடியாது. இது பனிமலை போலும், பசிபிக்குக் கடல் போலும் உறுதியான கொள்கையும், போராட்டமும் ஆகும்! வெல்க தமிழீழப் போராட்டம்! விடுதலை பெறுக தமிழர் நிலம்!

(4.9.1983)

தமிழக விடுதலைக் கோரிக்கையே தமிழீழத்தையும் வென்றெடுக்க வல்லது!

தமிழ்நாட்டுக் கோரிக்கையை நாம் உடனடியாக எழுப்பியாக வேண்டும். அதை இங்குள்ள தமிழினக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வெளிப்படுத்தியாக வேண்டும். இதற்காக நாம் எந்த நிலையிலும், யாருடனும் ஒன்றிணைய இரு கைகளை நீட்டி அணியமாக உள்ளோம். இந்தக் கோரிக்கைதான் இந்திய அரசை உடனடியாகத் தமிழீழத் தீர்வை நோக்கி நடையிடச் செய்யும். உந்து வேகத்தைக் கொடுப்பதாக இருக்க முடியும்! தமிழ்நாட்டில் இப்படியொரு கோரிக்கை, இலைமறை காயாக இருப்பது நடுவணரசுக்கும், இராசீவ் காந்திக்கும் தெரியும். இருப்பினும் அது, வெறும் குரல் கோரிக்கையாகத்தான் இருக்கிறது என்பதாலும், அதைக் கை வைத்துப் பெரிதுபடுத்தக்கூடாது என்னும் தந்திர உத்தியாலும், இதுவரை, எந்தவகையான நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் முன்வராமல் இருக்கின்றனர். ஆனால், இங்குள்ள அனைத்து இனநலக் கட்சிகளும் ஓங்கி அக்கொள்கையை ஒரு பெரும் முழக்கமாக எழுப்பும் பொழுது, அவர்கள் கட்டாயம் அதைச் செவிமடுத்தே ஆகவேண்டும். அதன்பின் அவர்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் மிகு வேகமாகத் தீவிரமடையும் என்றாலும், அத் தீவிரந்தான், தமிழீழ நெருப்பை நீருற்றி அணைக்க ஓர் உந்து விசையை அவர்களுக்குத் தரும். இந்த அணுகு முறை பயனளிக்குமே தவிர, எவ்வகையிலும் பயனில்லாமல் போகாது என்பதை உறுதியாக எண்ணிக்கொள்ள வேண்டும். மேலும், இந்தக் கோரிக்கை இங்கிருந்து எழுப்பப் பெறுமாயின், உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களின், ஒட்டு மொத்தமான விடுதலைக் குரலும் அக் கோரிக்கை முழக்கத்துடன் ஒன்றிணையும் என்பதில் ஐயமே இல்லை.

ஆனால், இங்கிருக்கும் ஏனோதானோபோக்குக்களைக் கொண்ட இயக்கங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமே! அஃது என்று நடக்குமோ? பொறுத்திருந்துதான் சொல்ல முடியும்.

(செப்.1985)

பட்டாசு மருந்துகளை வெடி குண்டுகளாக்கித் தமிழீழ விடுதலைப் போராளிகளிடம் கொடுங்கள்! தமிழினம் உய்யட்டும்!

அண்மையில் 'தீபாவளி' என்னும் விளக்கணிவிழா வரவிருக்கிறது. இதன் பெயரே தமிழ் இல்லை. எனவே இவ்விழாவும் தமிழர்களுக்கான தில்லை என்று தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது இந்தியாவில் கொண்டாடும் விழாக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு திராவிடர்களுக்கு— குறிப்பாகத் தமிழர்களுக்கு உரியவை அல்ல.

"ஆவணி அவிட்டம், விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை, தீபாவளி, கிருஷ்ணஜெயந்தி, ஸ்ரீராம நவமி, விஜயதசமி, மாசிமகம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், தமிழ் வருஷப்பிறப்பு, தெலுங்கு வருஷப்பிறப்பு, ஆடிக்கிருத்திகை, ஆடிஅமாவாசை, கோகுலாஷ்டமி" முதலிய அனைத்தும் ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கை, தொன்ம (புராண) அடிப்படை கொண்ட விழாக்களே! இவற்றிலும் இவைபோலும் பிற வற்றிலும் வாழ்வியல் அறிவுக்கோ அறிவியல் அறிவுக்கோ பொருத்தமான செய்தி ஒன்றுகூட இல்லை.

இவற்றின் பெயர்களைப் பார்த்தாலே இவை தமிழர் விழாக்கள் அல்ல என்று வெளிப்படையாகத் தெரியும். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் சார்பில் நின்று இதை நாம் சொல்லவில்லை. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் சார்பிலேயே நாம் இதனைச் சொல்லுகிறோம். இவ்விழாக்களில் ஏதேனும் கடவுள் உண்மை உள்ளது என்று எவராவது மெய்ப்பிக்க முடியுமா? மூடத்தனத்தையும் அறியாமையையும் விட இவற்றில் ஏதேனும் சிறு நன்மை உள்ளது என்று கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் எவரேனும் கூறமுடியுமா?

ஆனால், இந்த நேரத்தில் நாம் ஓர் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். அஃதாவது இந்த 'தீபாவளி' விழா வேடிக்கையில் பயன் படுத்தப்படும் 'பட்டாசு' வெடிகளின் புகைச்சல்களில் நூற்றுக்கு 75 பங்கு நம் தமிழ்நாட்டில் உள்ள சிவகாசியில் தான் செய்யப்பெறுகிறது. ஏன், உலகில் உள்ள பல நாடுகளுக்குமே இங்கிருந்துதான் வெடிகள் போகின்றன. எனவே, நம் சிவகாசியில் உள்ள தமிழர்களான நம் பட்டாசு முதலாளிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோளை நாம் இவ்வேளையில் முன் வைக்க விரும்புகிறோம்.

'அன்பான சிவகாசிப் பட்டாசுத் தொழிற்சாலை முதலாளிகளே! தமிழினத்துக்கு இப்பொழுது நேர்ந்துள்ள கொடுமையான நிலைகளை, நீங்கள், இப்பொழுது இலங்கையில் உள்ள சிங்களக் கயவர்களால் அங்குள்ள ஈழத்தமிழர்களுக்கு நடக்கும் இன அழிவுகளிலிருந்து மிக

நன்றாக உணர்ந்திருப்பீர்கள். அந்நிலைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நம் இளைஞர்களுக்குப் போதுமான போர்க்கருவிகள் இல்லை. இங்குள்ள இந்திய அரசும், அங்கு வீழ்த்தப்படுவது நம் தமிழினம் என்பதால், பார்த்தும் அவர்களுக்கு உதவி ஏதும் செய்ய இல்லை. செய்ய விருப்பமில்லாமல், பாராதது போல் உள்ளது. எனவே, நம் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்குத் தேவையான வெடிகுண்டுகளை, நீங்கள் இந்தத் 'தீபாவளி' வெடிகளுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைக் கொண்டு செய்து தருவீர்களானால் சீரழிந்துகொண்டிருக்கும் நம் தமிழினம் உய்ந்து விட வழிபிறந்துவிடும்! செய்வீர்களா? இல்லையெனில், நீங்களும் அழிந்து உங்கள் 'பட்டாசு'த் தொழிலும் அழிந்து, நம் வரலாறே அழிக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

—தமிழீழம் (விடுதலைப் போராளிகளும் போராட்ட முயற்சிகளும்)
— நூலிலிருந்து—

பாவலரேறு ஐயா அவர்களின்

திருக்குறள்

மெய்ப்பொருளுரை

[முதற் பகுதி]

முந்நூறு பக்க அளவில், எழுவகைப் பிரிவில் அமைந்த விரிவான முன்னுரையுடன் கூடியது!

முதற்பத்து அதிகாரங்களுக்கான உரை

பொருள்கோள்முறை, பொழிப்புரை, விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றைத் தாங்கியுள்ளது!

பரிமேலழகர் முதல் பாவாணர் வரை பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை ஏற்றும் மறுத்தும் எழுதப் பெற்ற விளக்கங்களைக் கொண்டது!

நூற்றுக் கணக்கான நூல்களிலிருந்து மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் எடுத்தாளப்பெற்றது!

ஆரிய நெறியை வீழ்த்தி அருந்தமிழ்நெறியை நிலைநாட்டுந் திறத்தது!

விலை : உரு. 150.00

நான் என்ன சாதி

—பாவலரேறு சாட்டையடி—

'தென்மொழி'யின் தொடக்கக் காலத்திலேயே நான் என்ன சாதி என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் பலருக்கு ஆர்வம் அளவுக்கு மேல் இருந்தது. அவரவர்கள், நான் அவர்கள் சாதியாக இருந்து விட மாட்டேனா என்று ஏக்கத்துடன் இருந்ததும் எனக்குத் தெரிந்தது. சிலர் அவ்வாறே நினைத்தும் மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். பலர் என்னிடம் நேரிடையாகக் கேட்கத் தயங்கினார்கள். சிலர் வேறுவகையான ஆராய்ச்சியில் எல்லாம் ஈடுபட்டார்கள். சாதி ஆசையையும் அங்காப்பையும் விடாத ஓரிருவர் என்னை நேரிடையாகவே ஓரிருமுறை கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நம் கொள்கையையே விடையாகக் கூறி அவர்களது சின்னத்தனமான ஆசையைக் கடிந்திருக்கின்றேன்.

பாவாணரைப்பற்றியும் இந்தச் சிக்கல் இருந்தது. ஏனோ தெரிய வில்லை; சிலருக்கு அவர்கள் கற்ற கல்வியைவிட, கொண்ட கொள்கையைவிட, இந்தச் 'சாதி'ப் பித்து மிகுதியாக வளர்ந்திருக்கிறது. கல்லாதவர்களைவிடக் கற்றவர்களிடந்தான் இப் பித்து மிகுதியாக இருக்கிறது என்றுஞ் சொல்லலாம். இதில் சிலர் போலித்தனமான ஒருவகைப் பெருமையையே வைத்திருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வந்த சாதிப்பற்று மிக்க அன்பரொருவர் 'பாவாணர் இன்ன சாதியென்று சொல்லுகிறார்களே; உண்மையா' என்று என்னிடம் ஒருமுறை கேட்டார். 'ஏன், அதைத் தெரிந்து கொண்டுதானா அவர் நூல்களை நீங்கள் படிக்கத் தொடங்குவீர்கள்?' என்று நான் அவரைக் கேட்டேன். அதற்கவர் 'இல்லை இல்லை; சும்மா கேள்விப்பட்டேனே என்றுதான் வினவினேன்' என்று பல்லை இளித்தார்.

அண்மையில் ஒருவர் (மிக மிக நெருக்கமான ஒருவர்) இந்த ஆராய்ச்சியில் ஒரு முடிவைக் கண்டுபிடித்திருக்கிறார். சில நேரங்களில் சிலரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'அவர் நம்ம ஆள்' என்று அவரிடம் குறிப்பிட்டிருக்கின்றேன். அதனால் நான் அவர் சாதிதான் என்று நினைத்துக் கொண்டாராம். இன்னும் சொன்னால் அவர் அப்படி நினைத்துக் கொள்ளட்டும் என்றே நான் அவ்வாறு சொல்லி யிருக்கின்றேனாம்; கண்டு பிடித்திருக்கிறார்.

தெனாலிராமன் கதையில் ஒரு கதை உண்டு. 'தனக்குள்ளது உலகத்திற்கு' என்பது அது. அதில் அரசனின் பணியாள் ஒருவன் தன்னிடம் கொஞ்சம் பொன் உள்ளதைக் கொண்டு, அரசன் கேட்டதற்கு, மக்கள் எல்லோரும் கொஞ்சம் கொஞ்சம் பொன் உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று கூறுவான். அரசன் அமைச்சரைக் கொண்டு அவனிடமுள்ள அந்தக் கொஞ்சம் பொன்னையும் எடுத்துக் கொள்ளச் செய்த பொழுது, அந்தப் பணியாள் அரசனிடம் முக வாட்டமாக, 'இந்த நாட்டிலுள்ள மக்கள் கொஞ்சம் பொன்னுக்கும் வக்கற்றவர்களாக உள்ளார்கள்' என்பான்.

அப்படி, நான் 'நம்மாள்' என்பது, 'நம் கொள்கையுள்ள ஆள்; அல்லது தமிழினத்தவர்; அல்லது பிராமணரல்லாதவர்' என்று இடத்திற்குத் தக்கபடி பொருள் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இருக்கும். சாதியுணர்வு நெஞ்சில் நெருப்பாய்க் கனன்று கொண்டிருக்கும் சிலர்க்கு அவ்விடை வேறு பொருளில் பட்டிருக்கின்றது. அதற்கு நான் என்ன செய்வது?

கடைசியில் 'நான் வேறு சாதி; என் துணைவி வேறு சாதி' என்று கண்டு கொண்டாராம். அப்படிக் கண்டு கொண்டதுடன் நிற்காமல் தன் சாதியைவிட என்சாதி மெலிந்த சாதி என்று வேறு பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறார்? என்ன செய்வது? மாந்தன் படிநிலை வளர்ச்சிக் காலந்தொட்டு, சாதியுடனேயே இறைவனால் படைக்கப் பெற்றிருக்கின்றான் என்று பார்ப்பனர் சொல்லும் 'வருணாசிரம தர்மத்தை'க் கடைபிடிப்பதில் அவர்களுக்கு அத்துணை அழுத்தமான நம்பிக்கை! ஆனால் புறத்தே பார்ப்பனியத்தைச் சாடுகின்ற கொள்கையை உடையவர், அவர்! அறிவியலும் படித்தவர். என்ன செய்வது? அறிவியல் வளர்ந்திருப்பது எல்லாம் வெறும் கருவி அளவில் தானே! மனஅளவை அதால் மாற்றிவிட முடியுமா, என்ன?

பகுத்தறிவு, பொதுமை, தமிழ், தமிழினம், மண்ணாங்கட்டி என்று பேசுவதெல்லாம் வெறும் கவர்ச்சிக்காகவும் காசுக்காகவும் என்று தானே பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! சாதியைக் கேட்டுத்தானே அறிவையும் கருத்தையும் கொள்கையையும் மதிப்பிடுகிறார்கள்! இந்தத் தமிழினம் என்றைக்குத்தான் உருப்படுமோ? இத்தகைய சாதிப் பேய்களும் வெறியர்களும் உள்ளவரை அஃது எங்கே உருப்படப் போகிறது!

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல். *(834)*

(சூன்.1982)

தென்மொழி அவையம்

ஒருங்கிணைக்கும்

— கருத்தரங்கம் —

தென்மாவட்டங்களில் சாதிவெறியாட்டம்
தமிழீழத்தில் மக்கள் படுகொலை

நாம் செய்ய வேண்டுவது என்ன ?

இடம்: சென்னை - திருவொற்றியூர் (அங்காடி அருகில்)
எண்ணூர் உருக்காலைத் (Foundries)
தொழிலாளர் கழகக் கட்டடம்.

நாள்: தி.பி. 2028 கன்னி 4 **(20.9.97)**
காரிக்கிழமை - காலை 10 மணி முதல்...

- தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில், மக்கள் அன்றாடம் சாதி வெறியாட்டங்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது.
- தமிழீழத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிவரும் மக்கள் இன்று அழிவின் உச்சக் கட்டத்தில் இருக்கின்றனர்.

இந்நிலைகளையும் பிறவற்றையும் விரிவாக ஆராய்ந்து, **நாம் செய்ய வேண்டுவது என்ன** என்பதற்கான வழிவகை காணும் பொருட்டுத் **தென்மொழி அவையத்தின்** சார்பில் பிற்காணும் நிகழ்ச்சி நிரலின்படி கருத்தரங்கம் நடைபெறுகிறது.

அன்பர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

கருத்தரங்க ஒருங்கிணைப்பு

'தென்மொழி அவையம்'

5 அருணாசலத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண்:8547829.

தென்மாவட்டங்களில் சாதிவெறியாட்டம்...

கருத்தரங்கம்

நாள்: கன்னி 4 (20.9.97) காரிக் கிழமை - காலை 10 மணி...

தலைமை: சொல்லாய்வு அறிஞர் **ப. அருளியார்**

வரவேற்புரை: **க. கண்ணன்.**

கருத்துரைகள்:

இரா. எழில்மலை
(பொதுச் செயலாளர், பாட்டாளி மக்கள் கட்சி)

இரா. திருமாவளவன்
(விடுதலைச் சிறுத்தைகள்)

தியாகு
(தமிழ்-தமிழர் இயக்கம்)

எசு.வி. இராசதுரை

உஞ்சைராசன்
(தலித்து பண்பாட்டுப் பேரவை)

க. முகிலன்
(மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி)

மா. பூங்குன்றன்
(உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்)

குமரிமைந்தன்
(தமிழக மக்கள் பொருளியல் உரிமைக் கழகம்)

நடராசன்
(மக்கள் பண்பாட்டுத் பேரவை)

ஆதித்தமிழன்
(அம்பேற்கர் சிறுத்தைகள் இயக்கம்)

கதிரவன்
(பெருஞ்சித்திரனார் பாசறை)

இறை. பொற்கொடி

நற்றேவன்

நன்றியுரை: **வேலு. இசைமொழி.**

தமிழீழத்தில் மக்கள் படுகொலை...

கருத்தரங்கம்

நாள்: கன்னி 4 (20.9.97) காரிக்கிழமை பகல் 4 மணி...

தலைமை: திருக்குறள்மணி புலவர். **இறைக்குருவனார்**

வரவேற்புரை: **அறிவுடைநம்பி**

கருத்துரைகள்:

பழ. நெடுமாறன்
(தமிழர் தேசிய இயக்கம்)
பெ. மணியரசன்
(தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி)
அரு. கோபாலன்
(ஆசிரியர்: 'எழுகதிர்')
கி.வே. பொன்னையன்
(தமிழ்நாடு மார்க்கிய இலெனினியக் கட்சி)
பேரா. சச்சிதானந்தம்
(காந்தளகம்)
விடுதலை இராசேந்திரன்
(பெரியார் திராவிடர் கழகம்)
இரா. பாவாணன்
பாவலர் இன்குலாபு
மா.செ. தமிழ்மணி
(பொதுச்செயலாளர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்)
இளங்கோவன்
(தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்)
பாவலர் வடிவேலனார்
துரை. இராவணன்
(செந்தமிழ்ச் சோலை)
தேன்மொழியருளியார்

நன்றியுரை: **தமிழிசை நற்றேவன்.**

நிகழ்ச்சியின் பகல்நேர இடைவெளியில் பாவலரேறு ஐயா அவர்கள் 'அயல்நாடுகளில் வாழும் தமிழர்களுக்கென அளித்த நேருரை'யின் ஒளிநாடாக் காட்சி (இருபது நிமைய அளவிலானது) இடம் பெறும்.

தென்மொழி அச்சகம், சென்னை 600 005. (தொலைபேசி: 854 7829)